பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 14 புதன்கிழமை (29.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 33

# அகதிகள் பேரவதி!

## மூன்று நாள்களாகியும் அரசின் நிவாரண உதவி இதுவரை இல்லை

## லட்சக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதி நிலையில் அந்தரிப்பு!

கொழும்பு,டிசெம்பர் 29

சுனாமி கடல் கொந்தளிப்பினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நம்பமுடியாத அளவுக்கு அதிகரித்துச் செல்கின்றது. நேற்றுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 20 ஆயிரத்தை எட்டியுள்ளது. எனினும், இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்றே மீட்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆயிரத்தை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையப் பணிப்பாளர் தெரிவித்தார் . ஒருபுறம் இந்த அவல நிலை தொடர, மறுபுறத்தில் அனர்த்தத்தில் தப்பிப் பிழைத்தவர்களின் நிலையும் மிக மோசமாக - பரிதாபகரமாக் - இருக்கின்றது. அவர்களுக்கான உதவிகள் போதியளவில் கிடைக்கவில்லை.

அழிவுநிகழ்ந்து மூன்றுநாள்களாகிவிட்டன. 10 லட்சம் வரையான மக்கள் அகதிகளாகியுள்ளனர். வடக்கு - கிழக்கில் மட்டும் 4 லட்சத்து 80 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் எவையும் நேற்றுவரை கிடைக்கவில்லை. வடக்கு - கிழக்குப் பகுதி அரசினால் புறக்கணிக்கப்பட்ட நிலையே இதுவரை இருந்துவருகின்றது. அதிலும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை அரசு முற்றுமுழுதாகக் கைவிட்டுள்ளது. தமது உறவுகளையும், இல்லிடங்களையும், உடைமைகளையும் கடலின் சீற்றத்துக்குப் பறிகொடுத்துவிட்டு நிர்க்கதியான நிலையில் நிற்கும் மக்களுக்கு அரச உதவிகளும் கிடைக்காத நிலையில்அவர்கள் பெரிதும் பரிதவித்துப் போயிருக்கிறார்கள். வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசுமீது மக்கள் ஆத்திரங்கொண்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சாவு: 20,000 பேர்!

கொழும்பு,டிசெ.29

சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்படுத்திய பேரழிவு நின்றபாடாக இல்லை. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துச் செல்கின்றது. நேற்றைய மதிப்பீடுகளின்படி 20,000 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தொகை மேலும் அதிகரிக்கும் என்றே அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

18 ஆயிரத்து 706 பேர் உயிரிழந்தனர் என்பதைத் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று உறுதிப்படுத்தியது. இந்த எண்ணிக்கை 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம்வரை அதிகரித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அது தெரிவித்தது.

கிழக்கு மற்றும் வடக்கு மாவட்டங்களே இந்த அனர்த்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அப்பிரதேசக் கரையோரப் பகுதிகளில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணி நேற்று மூன்றாவது நாளாகவும் இடம்பெற்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகளும், பொதுமக்களும், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோரும் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையினருடன் புலிகளும் இணைந்து மீட்புப்பணிகளில் உதவிவருகின்றனர்.

இந்தப் பேரனர்த்தத்தால் சுமார் 10 லட்சம் பேர்

(16ஆம் பக்கம் பார்க்க)

### நிவாரணப் பணிகளில் ஐ.தே.கட்சியும்!

கொழும்பு.டிசெ.29

கடற்கொந்தளிப்புப் பேரவலத்தினால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு மக்களுக்கு உரிய நிவாரண உதவியைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஐ.தே. கட்சியும் நடவடிக்கை எடுத்திருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்குப் பொறுப்பாக பிரட்மன் வீரக்கோனைக் கட்சித்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அன்பர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகளிடமிருந்து நிவாரணப் பொருள்களைத் திரட்டிச் சேகரித்து வடக்கு - கிழக்குக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

### மலையகத்திலிருந்து வடக்கிற்கு உதவி

கொழும்பு.டிசெ.29

மலையக மக்கள் முன்னணியினரால் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் இருபது லொறிகளில் வடக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இன்று எடுத்துச்செல்லப்படுகின்றன.

இந்தப் பொருள்களை எடுத்துச்செல்வதற்குப் பாதுகாப்புப் படையினர் எதுவித இடைஞ்சல்களையும் ஏற்படுத்தக் கூடாது எனவும், அதற்குரிய உத்தரவாதத்தைப் பாதுகாப்பு அமைச்சு

(16ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் வெள்ளியன்று துக்கதினம்

இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் குடாநாட்டில் எதிர்வரும் வெள்ளியன்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

அன்றையதினம் சகல இடங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிடும்படியும் கறுப்புப்பட்டி அணியும்படியும் சோககீதம் இசைக்கும் படியும் அரசியல்துறை யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி கேட்டுள்ளார்.

அன்று நண்பகல் 12 மணிக்கு ஆலய மணிகளை ஒலிப்பதுடன். 12 மணியிலிருந்து 12.10 மணிவரை சகல பணிகளையும் நிறுத்தி மரணித்தவர்களுக்காகப் பிரார்த்தனை செய்யும்படியும் அவர் மேலும் கோரியுள்ளார். (3)

### உதவிப் பொருள்கள் விநியோகம் நிறுவனமயப்படுத்தப்பட வேண்டும்

#### மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்.டிசெ.29

கடல் பெருக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய உதவிப் பொருள் விநியோகத்தில் துஷ்பிரயோகம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் உதவிகள் நிறுவன மயப்படுத்தப்பட்டு வழங்கப்படவேண்டும்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### இயற்கை அனர்த்தத்தை நேரில் கண்டறிய அரசுத் தரப்புக்குழு இன்று யாழ்.வருகின்றது

யாழ்ப்பாணம், டிசெ.29

இயற்கை அனர்த்தங்களால் குடாநாட்டில் ஏற்பட்ட சேதங்களை நேரில் கண்டறிவதற்கென அரசுத்தரப்புக் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

அரசமைப்புவிவகாரம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் டி.ஏ.டபிள்யூ. குணசேகர.

(16ஆம் பக்கம் பார்க்க)

### உதயன் தகவல் சேவை

வடமராட்சி, வடமராட்சி கிழக்கு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களில் சிக்கிக் காணாமற்போனவர்கள் தொடர்பான தகவல்களைப்பெற உதவும் வகையில் 'தகவற் சேவை' ஒன்றை உதயன் ஆரம்பித்துள்ளான்.

காணாமற்போனோர்களின் விவரங்களை நேரிலோ அல்லது தொலைபேசி இல.222 3837 மூலமோ அல்லது கடிதமூலமோ தெரியப்படுத்தினால் அவற்றைப் பிரசுரித்து தமது உறவுகளைக் கண்டுபிடிக்கத் தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு உதவிடும் சேவை இதுவாகும்.

காலை 7 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை தகவல் சேவை கருமபீடத்தினர் பணியாற்றுவர்.

மக்களுக்குத் தகவல் தெரிவிக்கும் பணியில் யாழ்.அரச அதிபரும் அனைத்து ஒத்துழைப்பையும் நல்க முன்வந்துள்ளார்.

### அனர்த்தத்தைப் பார்வையிட தொண்டுநிறுவன அதிகாரிகள் நாளை கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, டிசெ.29

வடக்கில் ஏற்பட்ட அனர்த்தங்களைப் பார்வையிடுவதற்காகச் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் மற்றும் கொழும்பில் செயற்படும் தூதரகங்கள் ஆகியவற்றின் அதிகாரிகள் குழு ஒன்று நாளை கிளிநொச்சிக்கு வருகின்றது.

நாளை முற்பகல் 11 மணிக்கு விடுதலைப் புலி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரணப் பொருள்களை தட்டிச் சுத்தியது ராணுவம்

கொழும்பு,டிசெ.29

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ஏதிலிகளுக்காக மலையகத்திலிருந்து மூன்று லொறிகளில் திருகோணமலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட நிவாரணப்பொருள்களை ஹபரணையில் வைத்து இராணுவத்தினரும் அவர்களுடன் இருந்த - தங்வுகளை அரச அதிகாரிகள் என்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாயிரம் பேர் உயிரிழந்ததாக அரச அதிபர் அரசுக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ்.மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களினால் உயிரிழந்த மற்றும் காணாமற்போனோர் எண்ணிக்கை 2 ஆயிரம் என யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் அரசுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் நிலை ஆகியன தொடர்பாக விவரமான அறிக்கையொன்றை

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### மனவடுநோய், மனச்சோர்வு ஏற்பட வாய்ப்புண்டு

# இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உளவளத்துணை ஆலோசனை வழங்கப்படல்வேண்டும்

### பேராசிரியர் தயா சோமசுந்தரம் அறிவுரை

யாழ்ப்பாணம்,டிசெ.29

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உடனடியான அனர்த்த நோய்க் கூட்டுத்தொகுதி அல்லது தீவிர நெருக்கீட்டுத் தாக்கம் ஏற்படுவது வரலாற்று நிகழ்வு. எனவே, அண்மையில் ஏற்பட்ட கடல் பெருக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டியது சகலரதும் வரலாற்றுக் கடமையாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலையின் உளநலப் பிரிவைச் சேர்ந்த உளமருத்துவ நிபுணர் பேராசிரியர் தயா சோமசுந்தரம். இது விடயமாகப் பேராசிரியர் விடுத்துள்ள பத்திரிகைச் செய்திக்குறிப்பு வருமாறு:-

ஓர் அனத்தத்திற்குப் பின்னர், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்குமான உடனடி மற்றும் நீண்டகாலத் தேவைகளை வழங்குகின்ற பணிகளின் பொழுது, அவை முழுமையான ஒரு பலனைப் பெறுவதற்கு, உளநலம் - உளசமூக ஆதரவு என்பவையும் முக்கியமான பகுதிகளாகக் கொள்ளப்படவேண்டும் என்பது உலகளாவியரீதியில் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள் வாயிலாக நிரூபணமாகியிருக்கின்றது.

இவ்வாறான அனர்த்த நிலைமைகளில், பாதிப்புக்குள்ளானவர்களில் 25 தொடக்கம் 75 வீதமானவர்களுக்கு உடனடி விளைவாக, அனர்த்த நோய்க்கூட்டுத் தொகுதி அல்லது தீவிர நெருக்கீட்டுத் தாக்கம் எனப்படுகின்ற ஒரு நிலைமை தோன்றுவதை நாம் எதிர்பார்க்கலாம்.

இந்நிலைமையின்போது, ஓர் அதிர்ச்சியடைந்த நிலை, இயங்க முடியாத தன்மை, குழப்பமான மனநிலை, மாறாட்டம், தீவிரமாக உணர்ச்சிவசப்படுதல், பதகளிப்பு போன்றவை ஒரு சில மணித்தியாலங்கள் தொடக்கம் சில நாள்கள் வரை காணப்படலாம். - இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்கள் குறுகிய நேர உளவியல் முதலுதவி மற்றும் நெருக்கீட்டில் தலையிடுதல் போன்றவற்றால் நன்மையடைவார்கள். நிவாரணப் பணியாளர்கள் ஏனைய உதவிகளோடு சேர்த்து இவற்றையும் வழங்கமுடியும்.

அனர்த்தங்களுக்குப் பின்னர் சில நாள்கள் தொடக்கம் நீண்டகாலம்வரை இழவிரக்கம், மனச்சோர்வு, பதகளிப்பு நெருக்கீட்டிற்குப் பிற்பட்டமனவடுநோய் போன்ற உளநலப் பிரச்சினைகள் தோன்றலாம். இவற்றிற்கு உளவளத்துணை சார்ந்த வழிமுறைகள், குழு வேலை, உளச்சமூக ஆதரவு போன்ற விசேடமான தலையீடுகள் தேவைப்படும்.

இவ்வாறான உளவியல் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு. நாங்கள் எங்களது உளவளத் துணையாளர்கள், உளச்சமூகத் தொண்டர்கள் மற்றும் பல்துறைசார் குழுவினரது (உளவளத் துணையாளர்கள், சமூக சேவையாளர்கள் சார்ந்த வழிமுறைப்பயிற்சியாளர்கள் போன்றோரை உள்ளடக்கிய குழுவினரது) சேவைகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம். இவர்கள் பாதிப்புற்ற தனிநபர்களுக்கு அல்லது அவர்களினது உறவினர்களுக்கு, அவர்கள் தங்கியிருக்கின்ற வைத்தியசாலை, பாடசாலை, முகாம்கள் போன்ற இடங்களிலோ அல்லது அவர்கள் வாழுகின்ற சமூகத்திலோ வைத்துத் தமது சேவைகளை வழங்கமுடியும்.

இதைவிட, இவ்வாறான பிரச்சினைகளைக் கையாள்வதற்குத் தேவையான அடிப்படை உளநலம் தொடர்பான பயிற்சிகளை நிவாரணப் பணியாளர்கள், சுகாதாரச் சேவையாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற பணியாளர்களுக்கு வழங்குவதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

மேலும், அனர்த்த நிலைமைகளில் நெருக்கீடுகளை எதிர்கொள்ளல் (செய்ய வேண்டியவையும், வேண்டாதவையும்) என்கின்ற பிரசுரத்தை இரண்டு பிரிவுகளாக (ஒன்று பொது மக்களுக்கானது, மற்றையது நிவாரணப் பணியாளர்கள் போன்றவர்களுக்கான அறிவூட்டல் சார்ந்தது) மறுபதிப்புச் செய்து வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பிரசுரங்களை, இன்னும் சிலநாள்களின் பின்பு, நீங்கள் கேட்டுக் கொள்ளும் பட்சத்தில், தேவைப்படுவோர்களுக்கு விநியோகிப்பதற்கென அனுப்பிவைக்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

இதுவிடயமான தொடர்புகளுக்கு:

★ உளநலப் பிரிவு, யாழ். போதனா வைத்தியசாலை - தொலைபேசி இலக்கம்: 021 222 2261 ext. 253.

★ மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு, யாழ். போதனா வைத்தியசாலை - தொலைபேசி இலக்கம் 021 222 5657.

★ சாந்திகம், 15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் - தொலைபேசி இலக்கம்: 021 222 3338 - என்றுள்ளது. (எ)

## பாதிப்புற்றோருக்கு உதவுங்கள்

இயற்கையின் கடுஞ்சீற்றத்தால் எல்லா வகைகளிலும், எல்லா வழிகளிலும், எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாகித் தவித்து அவலமுறும் எமது உறவுகளுக்கு உடனடியாக உதவும் நோக்குடன் 'உதயன்' ஆரம்பித்த சேவைக்கு எமது மக்கள் பேராதரவு தந்துவருகிறார்கள்.

முண்டியடித்துக்கொண்டு பொருள்களாகவும், பணமாகவும் உதவி வருகிறார்கள். கடந்த மூன்று நாள்களாகச் சமைத்த உணவு வழங்கப்பட்டது. மக்கள் பெருமனத்துடன் வழங்கிய - உதவிய - பொருள்களை இன்று தொடக்கம் பாதிப்புற்றோருக்கு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உதவிப் பொருள்கள் தொடர்ந்து குவிந்த வண்ணம் உள்ளன. மருந்து வகைகள், பாலர்களுக்குரிய பொருள்கள் பெருமளவில் தேவைப்படுவதாகச் சம்பந்தப்பட்ட தரப்புகள் அறிவித்துள்ளன. அதனைக் கருத்கொண்டு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### நாளைய உதயனில்...

பாதிப்புற்றோருக்கு உதவும் உதயனின் பணிக்குப் பணமாகவும் பொருளாகவும் உதவியவர்களின் முதலாவது விவரப்பட்டியல் நாளைய உதயனில் வெளியாகும்.

# நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்போருக்கு மனிதாபிமான உதவிகளை உடன் வழங்குங்கள்!

### மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கையின் சீற்றத்தால் உடுத்த உடையுடன் உயிரைக் கையில் பிடித்தவாறு ஒருவாறு தப்பி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எங்கள் உறவுகளுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை வழங்க அனைத்து மக்களும் முன்வரவேண்டும்.

இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

நேற்றுமாலை யாழ். மாவட்ட அரசியல் துறை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலே இளம்பரிதி இந்த அவசர வேண்டுகோளை விடுத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடல் அன்னையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்கள் புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பளை மகா வித்தியாலயத்திலும், அதனை அண்டிய ஏனைய பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இதைவிட, தென்மராட்சியில் 6 நலன்புரி நிலையங்களில் சுமார் 2ஆயிரத்து 500 பேரும்-

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் 18 நலன்புரி நிலையங்களில் சுமார் 7ஆயிரம் பேரும் -

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 13 நலன்புரி நிலையங்களில் சுமார் 5ஆயிரம் பேரும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்குரிய அவசர உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொருட்டுத் தமிழீழ விடுதலைப் புலிகளால் வடமராட்சியிலும், நெல்லியடியிலும் விசேட கருமபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகளையும் உடனடி அவசர உதவிகளையும் விடுதலைப் புலிகள் வழங்கி வருகின்றனர்.

இதனைவிட, பாதிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் போராளிகள், தொண்டர்கள் தொடர்ந்தும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள எமது உறவுகள் அரசினுடைய எதுவித உதவியுமின்றித் தவித்த வண்ணமுள்ளனர். எனவே, அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் உடனடி அவசர உதவிகளை வழங்க முன்வரவேண்டும்.

குறிப்பாக, குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் கிறேப்வாட்டர், ஓடிக் கொலோன, மருந்துவகைகள், உடுபுடவைகள், பாய், நுளம்புத்திரி, சவர்க்கார வகைகள் என்பன அவசரமாகத் தேவையாகவுள்ளன.

இதனைவிட, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு, வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் உறவுகளுக்கு உதவும் பொருட்டும், இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களை மீட்பதற்கும் தொண்டர்கள் தேவையாக உள்ளனர்.

எனவே, விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் கழகங்கள், பொது அமைப்புகள் என்பன இந்தப் புனித கைங்கரியத்தைச் செய்ய முன்வரவேண்டும் - என்றார். (எ-13)

# பாடசாலைகள், ஆலயங்களில் 13ஆயிரத்து 652 குடும்பங்கள்

### யாழ்.செயலகத்தின் கணக்கெடுப்பு இது

யாழ்ப்பாணம்,டிசெ.29

கரையோரப் பிரதேசத்தில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் இதுவரை 13ஆயிரத்து 652 குடும்பங்களைச் சேர்ந்த 48 ஆயிரத்து 729 பேர் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தங்கியுள்ளனர் என்று யாழ். செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 8 ஆயிரத்து 380 குடும்பங்களும், மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 251 குடும்பங்களும், காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் 520 குடும்பங்களும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் 250 குடும்பங்களும் நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் 251 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களும் அங்கு தங்கியுள்ள குடும்பங்களின் விவரங்களும் வருமாறு:-

**சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு**

☆ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி - 14 குடும்பங்கள்.

☆ வரணி மகாவித்தியாலம் - 293 குடும்பங்கள்.

☆ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் - 51 குடும்பங்கள்.

☆ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் - 38 குடும்பங்கள்.

☆ இடைக்குறிச்சி சிறிசுப்பிரமணிய வித்தியாலயம் - 66 குடும்பங்கள்.

☆ இடைக்குறிச்சி தேவாலயம் - 58 குடும்பங்கள்.

உறவினர் வீடுகளில் - 14 குடும்பங்கள்.

**பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில்**

☆ புலோலி எம்.எம்.ரி.எம்.பாடசாலை - 420 குடும்பங்கள்

☆ புற்றளை மகா வித்தியாலயம்- 111 குடும்பங்கள்

☆ தம்பசிட்டி எம்.எம்.ரி.எம் பாடசாலை - 85 குடும்பங்கள்

☆ அல்வாய் சிறிலங்கா மகா வித்தியாலயத்தில் - 251 குடும்பங்கள்

☆ பொலி கண்டி எச்.ரி.எம்.பாடசாலை - 161 குடும்பங்கள்

☆ அல்வாய் முத்துமாரியம்மன் மடம் - 45 குடும்பங்கள்

☆ வட இந்து பெண்கள் பாடசாலை - 75 குடும்பங்கள்

☆ துன்னாலை வடக்கு மாதா கோயில்- 39 குடும்பங்கள்

☆ அல்வாய் மேற்கு திக்கம் சித்தி விநாயகர் ஆலயம் - 57 குடும்பங்கள்

☆ பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம் -12 குடும்பங்கள்

☆ புனித சூசையப்பர் பரில் - 30 குடும்பங்கள்

☆ கொற்றாவத்தை ஏ.எம்.பாடசாலை - 35 குடும்பங்கள்

☆ தும்பளை ஆர்.டி.எஸ்.- 10 குடும்பங்கள்

**கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு**

☆ நெல்லியடி ம.ம. வித்தியாயலயம்- 207 குடும்பங்கள்

☆ திரு.இருதயக்கல்லூரி - 260 குடும்பங்கள்

☆ கம்பர்மலை ஜீ.ரி.எம்.பாடசாலை - 81 குடும்பங்கள்

☆ உடுப்பிட்டி ஏ.எம்.பாடசாலை - 250 குடும்பங்கள்

☆ உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை - 21 குடும்பங்கள்

☆ கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலையம் - 58குடும்பங்கள்

☆ அல்வாய் தெற்கு வதிரி ஜீ.ரி.எம் பாடசாலை - 40குடும்பங்கள்

☆ நாச்சிமார் மடம் - 97குடும்பங்கள்

☆ வல்வெட்டி வேவில்பிள்ளையார் கோயில் - 12 குடும்பங்கள்

☆ வல்வெட்டி வன்னிச்சி அம்மன் ஆலயம் - 20குடும்பங்கள்

☆ இமையானன் ஜீ.ரி.எம்.பாடசாலை - 20 குடும்பங்கள்

☆ சின்னத்தம்பி வித்தியாலயம் - 02 குடும்பங்கள்

☆ கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையம் - 12 குடும்பங்கள்

☆ கொற்றாவத்தை ஆரம்ப சுகாதார நிலையம் - 06குடும்பங்கள்

☆ கொற்றாவத்தை கல்விக் கழகம் -04 குடும்பங்கள்

☆ கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி - 250 குடும்பங்கள்

☆ மாலுசந்தி விநாயகர் ஆலயம் - 10 குடும்பங்கள்

☆ வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம் - 07 குடும்பங்கள்.

**மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில்**

☆ குடாரப்பு தென்னிந்தியத் திருச்சபைத் தேவாலயம் - 45 குடும்பங்கள்.

**ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவு**

☆ சென். செபஸ்ரியார் தேவாலயம் - 150 குடும்பங்கள்.

இக் குடும்பங்களுக்கான நிவாரணப் பணிகள் யாழ்.செயலகத்தினால் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை,

பல குடும்பங்கள் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளதால் அவர்களின் எண்ணிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-204-203)

## தேசிய எழுச்சிப் பேரவையால் துயர்துடைப்பு நிதியம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடக்கு - கிழக்கில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்காகத் துயர்துடைப்பு நிதியம் ஒன்றை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை ஆரம்பித்துள்ளது.

இந்த நிதியத்துக்கு உதவ விரும்புபவர்கள் பின்வரும் வங்கிக்கணக்கில் வைப்புச்செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மக்கள்வங்கி, பிரதான வீதிக் கிளை இலக்கம் 107 - 012026.

நல்லூர் ப.நோ.கூ.சங்க கிராமியவங்கி சேமிப்புக்கணக்கு இல.11719.

மேற்கண்ட இரு வங்கிக் கணக்குகள் ஊடாக மட்டும் அன்றி, யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல எழுச்சிப் பேரவைச் செயலகங்களிலும் வைப்புச்செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-3)

## யாழ். இந்துவின் உயர்தர மாணவர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். இந்துக்கல்லூரி ஜீ.சி.ஈ. உயர்தரம் (2006) வகுப்பு மாணவர்களை இன்று காலை 9மணிக்கு கல்லூரி முன்றிலில் ஒன்றுகூடுமாறு மாணவர் பிரதிநிதி கேட்டுள்ளார்.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிப்பொருள் சேகரிப்புத் தொடர்பாக இதில் ஆராயப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பருத்தித்துறை மற்றும் வடமராட்சி கிழக்கில் இயற்கையின் கோரம்...


பருத்தித்துறை முனைப் பகுதி




பருத்தித்துறை முனையில்...


பருத்தித்துறை முனையில்...


மணக்காடுப் பகுதி...


கற்கோவளத்தில்...


மணற்காட்டில் கஜேந்திரகுமார் எம்.பி.


மணற்காட்டுப் பகுதியைப் பார்வையிடும் மிதிவெடி அகற்றும் குழுவினர்.


மணற்காட்டில் கடற்படையினரின் முகாம் இருந்த இடம்.


மணற்காட்டில் இராணுவ உபகரணங்கள்...





மணற்காட்டில்....



படங்கள் : பார்த்திபன், வசந்தன், சுந்தரலிங்கம்


மணற்காட்டில் உள்ள மயானம் ஒன்றில்உடல்கள் புதைக்கப்படுகின்றன.





# முல்லைத்தீவில் இயற்கையின் கொடூரம் ஏற்படுத்திய அவலக் கோலங்கள்


மீட்புப் பணியில் பெண் புலிகள்


ஆறுதல் கூறும் காவல்துறையினர்


உறவுகளை இழந்த சோகத்தில் உறைந்திருக்கும் தாயும் மகனும்



















படங்கள் : கேசவன், விசுவமடுச் செய்தியாளர்




கதறி அழும் தாய்மார்..






ஒரே குழிகளில் சகலரும் அடக்கம்



உதயன்

## வழிதவறிப் போகும் அரசுப் போக்கு!

வரலாறு காணாத தேசியப் பேரவலத்தை - பேரனர்த்தத்தின் கொடூர விளைவுகளை - சந்தித்து அவலப்பட்டு, அல்லற்பட்டு நிற்கிறது இலங்கைத் தீவு.

உடன் பிறப்புகளை - உற்றாரை - உறவினர்களை - தங்கள் பிள்ளை, குட்டிகளைப் பறிகொடுத்து, உடைமைகளை இழந்து, அடுத்தவேளை உணவுக்கும் உடைக்கும் வழியின்றி, உறையுளுக்கும் இடமின்றி சொல்லொணாத் துயரத்தில் பல்லாயிரக் கணக்கில் நமது சகோதரங்கள் - இரத்தங்கள் துடித்துக் கொண்டிருக்கின்றன.

இயற்கையின் கோரத் தாண்டவத்தில் இழக்கப்பட்ட உயிர்களையும், உடைமைகளையும் சொத்துக்களையும் மீட்டுக்கொடுப்பது சாத்தியமற்றது. ஆனால், இந்த வேதனையில் புழுவாய்த் துடிக்கும் நம் உறவுகளுக்கு ஆறுதலளிக்கும் வகையில் ஏனையோர் ஆதரவு வழங்கி, நடந்துகொள்வதன் மூலம் அவர்களின் துயர்களைப் பகிர்ந்து கொள்ளவும் சோகத்திலிருந்து மீள்வதற்கு உரிய தெம்பூட்டலை அவர்களுக்குத் தரவும் முடியும்.

கடற்கொந்தளிப்பின் கோரத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களும் கால்நடைகளின் உயிரற்ற உடல்களும் ஆங்காங்கேயும் இடிபாடுகளுக்கு இடையேயும் சி[illegible]கிடந்து, கெட்டு அழுகிப் பெரும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றன.

இயற்கையின் ஊழித் தாண்டவத்தில் உயிரிழந்தவர்களை உரிய மரியாதையோடு அடக்கஞ் செய்வதும், அதில் பாதிப்புற்றோரை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச்சென்று முதலுதவி வழங்கி, மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவசர - அவசிய - கடமைகளாகின்றன. உடற்சிரமத்துடன் மேற்கொள்ளப்படவேண்டிய இந்தப் பொறுப்பை உடல் வலுவுள்ள - பாதிப்புற்ற பிரதேசங்களை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த - பொதுமக்கள் முன்னெடுப்பது அவர்களின் கடமையாகின்றது.

அடுத்தது, வீடு, வாசல்களையும் உடைமைகளையும் இழந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் கட்டடங்களிலும் ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந்திருப்போருக்கு குடிதண்ணீரும், உணவும், உடையும், மருந்தும், சுகாதார வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கும் அத்தியாவசியப் பணி முக்கியமானதாகின்றது.

ஆனால், அகதிகளுக்கு அவசர உதவியளிக்கும் இப்பணி தென்னிலங்கையில் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டாலும், வடக்கு - கிழக்கில் பாதிப்புற்ற மக்களுக்கு இன்னும் அவை சரிவர வந்துசேரவில்லை என்பதுதான் யதார்த்தம்.

மனதைப் பிழியவைக்கும் இந்த இயற்கைக் கோரம் நிகழ்ந்து இன்றுடன் மூன்று நாள்களாகி விட்டன. ஆனால், பாதிப்புற்றோருக்கு அவசர உதவிகள் ஏதும் அரசுத் தரப்பிலிருந்து இதுவரை கிட்டவில்லை என்பதுதான் பல இடங்களிலிருந்தும் கிடைக்கும் - நெஞ்சை நெருட வைக்கும் - தகவலாக அமைந்துள்ளது.

சர்வதேச தொண்டர் அமைப்புகளிடமும் உலக நாடுகளிடமும் கையேந்தும் கோரிக்கைகளை விடுத்துவிட்டு, அரசு பார்த்துக் கொண்டிருப்பதாக நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமைப்புகள் சீறுகின்றன.

அவசர நிவாரணப் பணிகளுக்கு அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்த நிதி மாவட்ட ரீதியாக எவ்வளவு என்று அவை கேட்கின்றன.

வெளிநாட்டு நிவாரணமும் உதவிகளும் வந்துசேரும் வரை ஆறுதல் கதை கூறிக் காலத்தை இழுத்துச் செல்கின்றனர் அரசுத் தலைவர்கள் என்று குற்றச்சாட்டும் எழுகின்றது.

இந்தப் பின்னணியில் வடக்கு - கிழக்கு மக்களின் நிலையோ - குறிப்பாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதிக்கப்பட்டோரின் நிலைமையோ - மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக உள்ளது. ஏற்கனவே யுத்தப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட அந்த மக்கள் மீண்டும் ஒரு மானுடப் பேரவலத்தை இயற்கையின் சீற்றத்தால் சந்திக்கவேண்டியவர்களாகியிருக்கின்றனர்.

அவர்களுக்கு உரிய - அவசர - அவசிய- நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதில் அரசு மட்டுமல்லாமல் தென்னிலங்கையின் தன்னார்வ அமைப்புகள் கூட பாராமுகமும், மாற்றாந்தாய் மனப்பான்மையும் காட்டுகின்றன என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கின்றது.

இந்த இயற்கைச் சீற்றத்தினால் இலங்கையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவும் அதை அண்டிய பகுதிகளும் அடங்குகின்றன.

மொழி, மத, அரசியல், இன வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று, பாதிப்புற்றோருக்கு உதவுவது சம்பந்தப்பட்டோரின் பொறுப்பும் கடமையுமாகும்.

தெற்கில் பொறுப்பற்ற அசட்டையீனம், வடக்கு - கிழக்கில் வேண்டுமென்றே புறக்கணிப்பு - இப்படி இலங்கை அரசும் அதன் தலைமையும் வழி தவறி நடப்பது இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களை மேலும் வேதனையிலும் விரக்தியிலும் ஆழ்த்தியிருக்கின்றது. இதனை உள்ளார்ந்தமாக உணர்ந்து உடன் சரியான வழியில் செயற்பட முன்வரட்டும்.

# இலங்கை புவியியல் ஆய்வு மையத்தில் தொழில்நுட்ப சாதனங்கள் போதாது!

## இழப்புக்கள் உயர்ந்ததற்கு இதுவும் ஒரு காரணமாம்

கொழும்பு.டிசெ.29

இலங்கையில் புவியியல் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வு மையம் ஒன்று இருந்தபோதிலும் அங்கு முறையான அவதானிப்புக்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளத்தக்க தொழில்நுட்ப சாதனங்கள் போதியளவில் இல்லை.

இதனாலேயே பூமி அதிர்வு ஏற்பட்ட வேளையில் அதுகுறித்த தகவல்களை மக்களுக்கு அறிவித்து, அவர்களைக் கடல் அனர்த்தத்திலிருந்து பாதுகாக்க முடியாது போய்விட்டது. கடல் அனர்த்தத்தின் இழப்புகள் உயர்வடைந்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் ஆய்வுத்துறைப் பேராசிரியர் கபில தஹநாயக்க. இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பூமியின் மையப்பகுதியில் ஏற்படும் இவ்வகையான அதிர்வுகள் காரணமாக புறச்சூழலில் இவ்வித பாதிப்புக்கள் உருவாவது வழக்கமே.

ஆயினும் கடந்த 2000ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் இத்தகைய அனர்த்தமொன்று ஏற்பட்டுள்ளது இதுவே முதல் தடவையாகும்.

இவ்வித சந்தர்ப்பமொன்றில் கடல் மட்டத்தின் கீழ் உருவாகும் கொந்தளிப்பு காரணமாகக் கடலலைகள் மேலெழுந்து கரையை நோக்கிப் பாயும் வேகம் மணிக்கு 500முதல் 1000கிலோமீற்றர் வரையில் அமையக்கூடும். இவ்விதம் கொந்தளித்துப் பிரவகிக்கும் கடலலைகள் கரையை நோக்கிப் பாய்வதற்கு ஏறக்குறைய இரண்டு மணித்தியால நேரம் எடுக்கும்.

இலங்கையில் புவியியல் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வு மையமொன்று இருந்தபோதிலும், அங்கு முறையான அவதானிப்புக்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளத்தக்க தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அத்துறைசார் ஆய்வாளர்களது சேவை என்பன இல்லாமை காரணமாக, இவ்வித பூமியதிர்வுகள் ஏற்பட்டவேளையில் உடனடியாக அது குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்த இயலாத நிலை ஏற்பட்டது.

உலகில் எந்தவொரு பகுதியிலும் எந்தவொரு வேளையிலும் பூமியதிர்ச்சி இடம்பெறக்கூடும். உலகில் இன்றுள்ள எந்தவொரு புவியியல் பாதிப்புக்கள் தொடர்பான ஆய்வாளர்களால் கூட பூமியதிர்ச்சி இடம்பெறப்போவதை முற்கூட்டியே தெரிவிப்பது இயலாததொன்றாகும்.

இவ்வாறான பூமியதிர்ச்சி ஏற்பட்டதன் பின்னரே அது குறித்து அந்த ஆய்வாளர்களால் விவரிக்க இயலும்.

இந்துசமுத்திர மையப்பகுதியில் கடந்த 26ஆம் திகதி அதிகாலை சுமார் 6.58 மணியளவில் பூமியதிர்ச்சி உருவாகியுள்ளது.

அவ்வேளையில் அது குறித்து இலங்கையின் கரையோர வாழ் மக்களை எச்சரிக்க அப்பிரிவுக்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கும்.

ஆனால், இதுகுறித்து அவர்கள் மீது நாம் குற்றம் சுமத்தமுடியாது. காரணம், அவசியமான தொழில்நுட்ப வசதிகள் அப்பிரிவில் அமைந்திருக்கவில்லை - என்று தெரிவித்தார். (4)

# கரவெட்டியைச் சேர்ந்த குடும்பம் மட்டக்களப்புக் கடலில் மூழ்கியது!

## கணவன், மனைவி, மூன்று பிள்ளைகள் பலி!!

கரவெட்டி.டிசெ.29

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்ற கடல் கொந்தளிப்பில் வடமராட்சி, கரவெட்டியைச் சேர்ந்த தாய், தந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் பலியாகியுள்ளனர்.

இது தொடர்பான தகவல் சில தினங்கள் கழித்து நேற்றுக் காலையிலேயே கரவெட்டியிலுள்ள அவர்களின் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இவை பற்றித் தெரியவருவதாவது:-

கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை பராபரன் (வயது-55 மக்கள் வங்கி உப முகாமையாளர், கொழும்பு) என்பவரும் அவரின் மனைவி பராபரன் ஜனதா (வயது-50), அவரது பிள்ளைகளான கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவி ப.மோகனப்பிரியா (வயது-17), கொ/திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவிகளான ப.பானுமதி (வயது-14), ப.ஹம்சத்வனி (வயது-11) ஆகியோரே உயிரிழந்தனர்.

விடுமுறைகளைக் கழிப்பதற்கும் நேர்த்திக்கடனை நிறைவேற்றவும் மட்டக்களப்பு,கல்லாறு கடற்கரைப் பிரதேசத்தில் உள்ள காயத்திரிபீட ஆலயத்திற்கு சென்றபோது ஆலயத்திற்கு அண்மையில் திடீரென ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் இழுத்துச்செல்லப்பட்டுப் பலியானார்கள்.

இவர்களில் தந்தையான பராபரனது சடலமும் மகளான மோகனப்பிரியா என்பவரது சடலமும் மட்டக்களப்பு மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டு அடக்கம் பண்ணப்பட்டதாகவும் ஏனையவர்களின் சடலங்களை மீட்கும் பணி தொடரப்பட்டிருப்பதாகவும் மட்டக்களப்பு அரச பணியகத்தால் அறிவிக்கப்பட்டிருப்பதாக கரவெட்டியிலுள்ள அவர்களது குடும்பத்தினர் தெரிவித்தனர். (4-70)

### முல்லைத்தீவு அனர்த்தத்தினால்

## 'செந்தளிர்' பராமரிப்பு இல்ல மழலைகளும் மாண்டனர்!

விசுவமடு.டிசெ.29

முல்லைத்தீவில் இடம்பெற்ற பேரழிவில் முல்லை செந்தளிர் சிறுவர் பராமரிப்பு இல்லத்தைச் சேர்ந்த சிறுவர்கள் பலரும் உயிரிழந்திருக்கின்றனர். இவ்வாறு உயிரிழந்தோரில் நேற்றுமுன்தினம் வரை 15சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறார்களின் 13 சடலங்களும் வள்ளிபுனம் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தளபதி கேணல் விதுஷா, மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மகளிர் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கீதா, மாவீரர் பணிமனை மகளிர் பொறுப்பாளர் அர்ச்சனா ஆகியோர் கலந்துகொண்டு தமது இறுதி வணக்கத்தை தெரிவித்தனர். பெருமளவான பொதுமக்களும் இக்குழந்தைகளுக்கு தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தினர்.

பின்னர் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியில் ஏனைய பொதுமக்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் இச்சிறுவர்களின் சடலங்களும் உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டன. (4-305-204)

# உதவிக்கரம் நீட்ட முன்வருமாறு பொது அமைப்புக்கள் அறைகூவல்!

யாழ்ப்பாணம், டிசெ.29

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ள முன்வருமாறு பல்வேறு பொது அமைப்புக்கள் பலவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம், யாழ். ஆயர் இல்லம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை ஆகிய அமைப்புகள் இந்த அவசர வேண்டுகோள் விடுத்துள்ளன.

இயற்கை அனர்த்தமான கடல் கொந்தளிப்பால் வீடுகளையும், உடைமைகளையும், குடும்ப உறவுகளையும் இழந்து நிற்கும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி முகாம்களில் தங்கியுள்ளார்கள்.

இவர்களுக்கு வேண்டிய பாய், படுக்கை விரிப்பு, உடுபுடைவைகள், குழந்தைகளுக்கான பால்மாவகைகள், மருந்துகள், உலர் உணவுகள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என்பவற்றைக் கொடுத்து உதவுமாறு அந்த அமைப்புக்கள் கோரியுள்ளன.

உதவி செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தமது உதவிப் பொருள்களை யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை - வீரசிங்கம் மண்டபம் - இரண்டாம் மாடி- யாழ்ப்பாணம், யாழ். ஆயர் இல்லம் (யாழ்ப்பாணம்), கியூடெக் (மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்), இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (கண்டிவீதி, யாழ்ப்பாணம்), யாழ். வணிகர் கழகம் (மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்) ஆகிய இடங்களில் ஒப்படைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(4-202)

### நாளை

*மார்கழி 15*
*வியாழக்கிழமை*
*(30.12.2004)*
*திதி: சதுர்த்தி*
*பின்னிரவு. 04.36*
*நட்சத்திரம் : ஆயிலியம்*
*முன்னிரவு 9.10*
*சுபநேரம்: 07.59 - 09.29*
*ராகுகாலம்: 1.59- 3.29*
*(பழையநேரப்படி)*

# யாழ். செயலகக் கருமபீடத்தில் உதவிப் பொருள்கள் சேர்கின்றன

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவும் பொருட்டு யாழ். செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் உதவிப் பொருள்கள் சேர்ந்தவண்ணம் உள்ளன.

குடாநாட்டின் சகல பாகங்களிலும் உள்ள பொதுமக்களும் மற்றும் தொண்டு நிறுவனங்களும் உதவிகளை மனமுவந்து வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு வழங்கப்பட்ட உதவிப் பொருள்களின் ஒரு தொகுதி நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

சமைத்த உணவு, உடுபுடைவைகள் மற்றும் பால்மா, பாய் என்பனவே வழங்கப்பட்டன.

இந்தக் கருமபீடம் தொடர்ந்தும் இயங்கவுள்ளதாகவும் எனவே பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு தொடர்ந்தும் உடனடி உதவிகளை வழங்கப் பொதுமக்கள் முன்வரவேண்டுமெனவும் குறிப்பாகக் குழந்தைகளுக்கான பால்மா வகைகள், உடுபுடைவைகள் என்பன உடனடித் தேவையாக உள்ளதாகவும் அரச அதிபர் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். (ஐ-13)

### உதயவாக்கு

பயன்கருதா நற்செயல்கள்
மனத்தைத் தூய்மையாக்கும்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணி, வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி வடக்கில் இறுவத்திப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஏறக்குறைய 15 பரப்புக் காணியும் நல்ல நிலையிலுள்ள பெரிய கல்வீடும் விற்பனைக்குண்டு. இந்தக் காணியில் பலவித மரங்களும் இரண்டு பெரிய கல்லரிக்கட்டு கட்டப்பட்ட கிணறுகளும் மின்சார வசதியும் உண்டு. தொடர்பு: T.P.: 077 3053145.

(சி-40091)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**Prima Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்றர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(40120)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக்கொளளலாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தஞ்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி.

(40193)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்திற்கு முன்பாக 17/3, கோணாவளை வீதியில் மூன்று அறைகளுடன் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0777 - 732863.

(40177)

சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு, 38/1, சோமசுந்தரம் அவன்யு சுண்டிக்குளி. T.P. 021 222 5964. (40200)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட **Original Prima Broiler,** பேட்டுக்குஞ்சுகள் 03.01.2005 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், குட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்றர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40020)

# கண்ணீர் அஞ்சலி



## வல்லிபுரம் கந்தையா

(முன்னாள் மைதான பராமரிப்பாளர், யாழ். மத்திய கல்லூரி)

*உளமார்ந்த உழைப்பின் தோற்றமாய்*
*எம்மிடை விளங்கிய விளக்கமே!*
*உம்மை என்றும் மறப்பதற்கு இல்லை.*

**சென்றலைட் விளையாட்டுக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

(40194)(26-1-15)

## வாகனங்களில் கறுப்புக்கொடி

கரவெட்டி,டிசெ.29

வடமராட்சியில் வாகனங்கள் அனைத்தும் வெள்ளை, கறுப்புக் கொடிகளுடனேயே சென்று வருவதை காணமுடிகிறது.

மேலும் வடமராட்சியில் இருந்து பாதிப்புற்றவர்கள் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் அனைத்து வாகனங்களும் முன்பக்க மின ஒளியைப் பாய்ச்சிய வண்ணமே தமது சேவைகளை மேற்கொள்கின்றன.(4-70)

## பிற்போடப்பட்டது

தியாகி அறக் கொடை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவிருந்த தையல் கண்காட்சியும் விற்பனையும் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுகள் கடந்த திங்கட்கிழமை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிறிதொரு தினத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதாக தியாகி அறக் கொடை நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (4-204)

## டி.ஏ.எம்.எஸ். பட்டதாரிகள் சங்கம்
## அவசர வேண்டுகோள்

பல்கலைக்கழகம் ராஜகிரியா உட்பட, கொழும்பு டீ.ஏ.எம்.எஸ். பட்டதாரிகள் அனைவரும் வருடசந்தா அபிவிருத்தி நிதிக்கு என ரூபா இரண்டாயிரத்து அறுநூறு (2600/=) ரூபாவினை அவசர தேவை கருதி 30-12-2004 ஆம் திகதிக்கு முன்பாக Dr.சபாநாதன், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்து தவும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:* சகல டீ.ஏ.எம்.எஸ். பட்டதாரிகளையும் 30-12-2004 காலை 10.30 மணிக்கு Dr. சபாநாதன் இல்லத்தில் ஒன்றுகூடுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

**Dr.க.இராஜரெட்ணம்,** தலைவர். — **Dr.சபாநாதன்,** செயலாளர்.

(40188)(26-19-15)

# PATRICIAN INSTITUTES
## பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

**ஆரம்பம்: 03-01-2005**

| | | |
|---|---|---|
| I. A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION | 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION | 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION | 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION | 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION | 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION | 3 MONTHS |
| G. INTERNET & E - MAIL | DURATION | 1 MONTH |
| I. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION | 5 MONTHS |

**II. CERTIFICATE COURSES:**

| | | |
|---|---|---|
| 01) M.S. WORD - 2000 | 06) PASCAL | 11) d BASE FOR WINDOWS |
| 02) M.S. EXCEL - 2000 | 07) d BASE III+ | 12) PRINT SHOP DELUXE |
| 03) M.S. ACCESS - 2000 | 08) PAGE MAKER | 13) ADOBE PHOTO SHOP |
| 04) M.S. POWER POINT | 09) WINDOWS 95 | 14) QUICK BOOK |
| 05) VISUAL BASIC VER 6.5 | 10) COREL DRAW | EACH 3 MONTHS |

| | | |
|---|---|---|
| III. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| IV. | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. | ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII. | வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII. | கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. | மின் ஒட்டுநர் பயிற்சி (ARC WELDING & GAS WELDING) (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| X. | மரவேலை (with Use of Machinery) | காலம் 6 மாதங்கள் |
| XI. | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

எமது நிறுவனத்தில் வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம்செய்து கொடுக்கப்படும். அத்துடன், சகல விதமான இரும்பு சார் உற்பத்திப் பொருள்களும் ஒட்டுவேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமையாகவும் செய்துகொடுக்கப்படும்.

**NOTE:-**

1. பயிற்சிக் கட்டணங்களைத் தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரஙகாட்டி பங்குக் குருவானவரன் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

### வாகனத் தகுதிச் சான்றிதழ் - 2005

2005 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தில் வழங்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றன என்பதைச் சகல வாகன உரிமையாளருக்கும் அறியத்தருகின்றோம்.

*(சனி, ஞாயிறு வகுப்புகளும் இடம்பெறும்)*

**மேலதிக விவரங்களுக்கு:**

**REGISTRAR,**
**PATRICIAN INSTITUTES,**
**59, ST. PATRICK'S ROAD,**
**JAFFNA.**

(C/40076) (26-19-15)

# தவறிவிட்டது

பாலசிங்கம் விஜயகுமார் (28THE GLADE, ILFORD, ESSEY IG50NF, LONDON) என்பவரது பிரித்தானிய சாரதி அனுமதிப்பத்திரமும் முக்கிய ஆவணங்களும் அடங்கிய சிறிய உறையொன்று 28-12-2004 அன்று தெல்லிப்பழைக்கும் தாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் தொடர்புகொள்ளவும்.

**விஜதா ஹாட்வெயர்ஸ்**
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.
T.P.: 0777 - 294360 / 0777 - 498975.

(26-19-15) (40192)

# பொதுக்கூட்ட அறிவித்தல்

வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை (2004.12.30) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரநதனில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதினால், மீளாய்வு செய்யப்பட்டு, உறுப்புரிமை பெற்றுள்ள அனைத்து உரிமையாளர்களையும், நெறியாளர்குழு உறுப்பினர்களையும் தவறாது இப்பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

01. பொதுச்சுடர் ஏற்றல்
02. கொடி ஏற்றல்
03. அகவணக்கம்
04. தலைவர் தலைமையுரை
05. உதவி ஆணையாளர் உரை
06. புதிய முதலீடுகளுக்கான அங்கீகாரம்
07. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு
08. சிறப்புரை
09. ஏனைய விடயங்கள்
10. நன்றியுரை

**தலைவர்**
**சி.பாஸ்கரன்,**
**வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்.**
**பரந்தன்/கிளி.**

**செயலாளர்**
**க.சி.மணியம்,**
**வ.பி.பா.ஊ.உ.ரி.கூ.சங்கம்**
**பரந்தன்/கிளி.**

(C/40059)(12-13-19-26)

# எத்தனை அலைகளைக் கடந்திருப்போம் இப்படி ஒருபோதும் நடந்ததே இல்லை!

## கடற்றொழில் சங்கத் தலைவரின் பிரமிப்பு!!

யாழ்ப்பாணம்,டிசெ.29

எத்தனையோ அலைகள் மத்தியில் நீண்ட தூரம்வரை படகில் சென்று தொழில் செய்து வந்திருக்கின்றோம். ஆனால், இப்படியான ஓர் அலையை ஒருபோதும் கண்டதில்லை. இக் கடற்கரையில் இருந்து அக்கம் பக்கம் கரைகளை நோக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடலைப் பார்க்கும்போது என்னை அறியாமல் தலைசுற்றுவது போன்ற பிரமை ஏற்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் அனர்த்தம் விளைவித்த அலையை நேரில் பார்த்த - திகிலடைந்த நிலையில் காணப்பட்ட திக்கத்தில் இயங்கும் காங்கேசன்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் சி.விஜயரத்தினம்.

மேலும் அவர் தனது அனுபவத்தைத் தெரிவிக்கையில், வீட்டிலிருந்து திக்கம் நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தவேளை, கடலில் இருந்து பேரிரைச்சல் கேட்பதை அவதானித்து விட்டு கடலைத் திரும்பிப் பார்த்தபோது சுமார் ஒரு பனை(40 அடி) உயரத்தில் கடல் எழும்பி வருவதைக் கண்டேன்.

அவ்வேளை, பின்நோக்கி ஊர்மனைப் பக்கமாக திரும்பிச் சென்று பார்க்கையில் கடற்கரையோரமாகக் கட்டப்பட்டிருந்த வள்ளங்கள் யாவும் கட்டறுக்கப்பட்ட நிலையில் குடிமனைப் பக்கமாகத் தூக்கி வீசப்பட்டன. வீடுகள், மதில்கள் மீது கொந்தளித்த கடல் மோதி சகல கட்டடங்களும் சாய்ந்துகொண்டிருந்தன.

இவ்வனர்த்தத்தைப் பார்த்ததும் ஏது செய்ய என அறியாத நிலையில் எனது வீடு வாசலையும் நினைத்துப் பார்க்கமுடியாமல் திகில் நினைவுகளுடன் சைக்கிளில் ஓடி சுமார் 15 நிமிடங்களின் பின் எனது பகுதிக்குச் சென்று பார்த்தபோது அனைத்துக் குடிமனைகளும் தரைமட்டமாகக் காணப்பட்டன.

நான் ஓடியவேளை கூக்குரலிட்டவாறு பெரும்பாலான மக்கள் எப்பொருள்களையும் எடுக்காமலே ஏனைய உட்பக்கக் குடியிருப்புக்களை நோக்கி ஓடி வருவதைக் கண்டேன்.

எமது சங்கக் கட்டடமும் மயிலிட்டிக் கடற்றொழிலாளர் சங்கக் கட்டடமும் தரைமட்டமாகிப் போயிருந்தன என்றார்.

(4-15)

## காயமடைந்தோருக்கு சாவகச்சேரியிலும் சிகிச்சை

தென்மராட்சி,டிசெ.29

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களால் காயமடைந்த முன்னூறுக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட காயமடைந்த பொதுமக்கள் உடனடியாக சிகிச்சையளிக்கப்பட்டு அம்புலன்ஸ் மற்றும் தனியார் வாகனங்களில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

மூன்று குழந்தைகளின் சடலங்களும் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகத் ஆஸ்பத்திரிப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாகன் தெரிவித்தார். (4-117)

## சமைத்த உணவைத் தவிர்த்து உலர் உணவுகளை அனுப்புக!

### உதவுவோருக்கு அரசியல்துறை அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடற்கொந்தளிப்பால் பாதிப்புற்று வடமராட்சியில் இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவுமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு உதவுவோர் சமைத்த உணவைத் தவிர்த்து உலர் உணவுப் பொருள்களையே வழங்குமாறும் அரசியல்துறை கேட்டுள்ளது. அத்துடன் உடை, சிறுவர்களுக்கான பால்மா வகைகள், பாய்போன்ற பொருள்கள் அவசரமாகத் தேவைப்படுவதால் அப்பொருள்களையும் வழங்கி உதவுமாறு கேட்டுள்ளனர்.

(4-202)

## சுழிபுரம் மீனவர்களின் படகுகளும் கடல் நீரில் அள்ளுண்டு போயின

### பலகோடிரூபா பெறுமதியானவையாம்!

வலி.மேற்கு,டிசெ.29

சுழிபுரம் பகுதி கடற்றொழிலாளர்களின் பலகோடி ரூபா பெறுமதியான வள்ளங்கள், கட்டுமரங்கள் வலைகள் யாவும் கடல்நீரினால் அடித்துச்செல்லப்பட்டன.

சுழிபுரம், சவுக்கடி, புளியந்துறை, திருவடிநிலைப்பகுதி மீனவர்களின் சகல கடற்றொழில் உபகரணங்களும் கடல்நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் இப்பகுதிகளில் கடற்றொழிலாளர்கள் மிகுந்த சோகத்துடன் காணப்படுகின்றனர்.

இப்பகுதிகளிலுள்ள மீனவர் தங்குமிடங்கள், கோயில்கள், கிணறுகள் ஆகியனவும் கடல்நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இந்தக் கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் 240 மீனவர்கள் தமது முழு கடற்றொழில் உபகரணங்களையும் இழந்து தவிக்கின்றனர் என்று கூறப்பட்டது.

(4-175)

## சத்துணவு மா வழங்கப்பட்டது

தென்மராட்சி,டிசெ.29

தென்மராட்சி பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு சாவகச்சேரி நகரசபையினர் 350 கிலோ சத்துணவு மா பைக்கற்றுக்களை வழங்கியுள்ளனர்.

பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களுக்கு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் நேற்றுமுன்தினம் நேரடியாகச் சென்று பாதிப்புற்ற மக்களிடம் சத்துணவு மாப்பைக்கற்றுக்களை வழங்கினர்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நகரசபை உத்தியோகத்தர்கள் சமைத்த உணவுகளை வழங்க ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (4-117)

## தவறவிட்ட உறவுகளைத் தேடுவதற்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவி

### அதற்கென 'தொடர்பு மையம்' அமைப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கை அனர்த்தத்தால் உறவுகளைப் பிரிந்து அவர்களைப் பற்றி அறியாது தவிக்கும் மக்களுக்காக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 'உறவுகளைத் தேடுவதற்கான உறவு மையம்' ஒன்றை ஆரம்பித்துள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொடர்பு மையத்தில் தகவல் பெறவிரும்புவோர் இல. 106,4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ 021-222 2416, 021 222 3847 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது trro@sltnet.lk என்ற ஈமெயில் முகவரியுடனோ தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக உறவுகளைத் தேடிய வண்ணம் யாழ்.வைத்தியசாலையில் இருப்பவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தேடப்படுபவர்கள் அல்லது அவர்கள் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு அறியத்தருமாறு நிறுவனத்திட்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

தேடப்படுபவர்களின் விவரங்கள் வருமாறு:-

(தேடப்படுபவர்களின் விவரம் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது)

புஜதா வயது 15 (கு.வாணிஸ்ரீ, வத்திராயன், தாளையடி), குணநாயகம் வனிதாமணி, குணநாயகம் கலைச்செல்வன், குணநாயகம் திருமகள் (கு.கலைமகள், வல்வெட்டித்துறை), நாகரத்தினம் விஜித்ரா (நாகரத்தினம் விஜித்ரா, உடுத்துறை, தாளையடி), குடும்ப உறுப்பினர்கள் (நாகரத்தினம் விஜயராஜ், உடுத்துறை), சுரேந்திரன் வயது 22, சுரேஸ் வயது 15 (பாலச்சந்திரன் சுவர்ணா, உத்திராயன் வடக்கு, தாளையடி),

பாலச்சந்திரன் (பாலச்சந்திரன் சுகந்தி, வத்திராயன் வடக்கு, தாளையடி), பிரபாகரன், சுரேஸ்கரன் (காந்தரூபன் விமலாதேவி, உத்திராயன் வடக்கு, தாளையடி), தேவ அன்ரனி, தேவராயன், தேவசுதன், தேவஜெனிற்றா, றெஜினா (ச.தேவவனித்தா, வத்திராயன் வடக்கு, தாளையடி).

இதேவேளை -

யாழ்.வைத்தியசாலையில் தங்கியுள்ளவர்களைப் பராமரிப்பதற்கு ஆள்கள் தேவைப்படுவதாகவும் பணிசெய்ய விரும்பும் அமைப்புக்கள் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

(4-202)

## மட்டக்களப்பில் பாதிக்கப்பட்டோருக்கு வவுனியாவிலிருந்து உலர் உணவு

மட்டக்களப்பில் கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வவுனியாவிலிருந்து உலர் உணவுப் பொருள்களும் மருந்து வகைகளும் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

ஐந்து லொறிகளில் வவுனியா மக்களினால் அன்பளிப்பு செய்யப்பட்ட பொருள்களை வன்னி மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நேற்றுக் காலை வவுனியாவிலிருந்து எடுத்துச்சென்றார்.

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பகுதிகளுக்கு அவசர தேவைக்குரிய பொருள்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவையும் வவுனியா மக்களினால் சேகரிக்கப்பட்டவையாகும். தாயக உறவுகளுக்கு மனம் உவந்து பலர் உதவிகளை வழங்கியுள்ளார்கள்.

சமய நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள், பொது அமைப்புகள், இளைஞர் அமைப்புக்கள், தனிப்பட்ட நபர்கள், வவுனியா வர்த்தக சங்கம், செஞ்சிலுவைச்சங்கம், லயன்ஸ் கழகம் ஆகியன நிவாரண பொருள்களை சேகரித்து வழங்கியுள்ளன.

(8)



யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், ரவிராஜ் எம்.பி., தங்கன் ஆகியோர் பார்வையிட்டபோது...





சடலங்களைப் புதைப்பதற்காக புல்டோசர் மூலம் குழிகள் தோண்டப்படுகின்றன.



உறவுகள் யாரும் காணுமுன்னே புதைகுழிக்குள்..



மருதங்கேணி கரையில் புதைப்பதற்குத் தயாரான நிலையில் சடலங்கள்....

## நோர்வே அரசு அனுதாபம்

யாழ்ப்பாணம்,டிசெ.29

இலங்கையில் கடற்கொந்தளிப்பால் பலியானவர்களுக்கு நோர்வே அரசு தனது அனுதாபச் செய்தியை வெளியிட்டுள்ளது.

கடல் கொந்தளிப்பால் தாக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கும், அரசுக்கும் நோர்வே அரசு ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவென 160 மில்லியன் ரூபாவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளது.

(8-202)

## கணக்கீட்டுப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

இலங்கை கணக்கீட்டு நிறுவனத்தால் ஜனவரி மாதம் முதல்வாரத்தில் நடத்தப்படவிருந்த இலங்கை கணக்கீட்டுப் பரீட்சை (AAT) தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகள் பெப்ரவரி மாதம் 5ஆம், 6ஆம், 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அதன் இணைப்பாளர் கமலேஸ்வரன் தெரிவித்துள்ளார். (8-7)

## மாணவர்களிற்கான முக்கிய அறிவித்தல்

கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டிருக்கும் எமது உடன் பிறப்புகளிற்கு உதவிக்கரம் நீட்டும் முகமாக IIS சமூகத்தினரால் விசேட ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன. எனவே, இது தொடர்பான மாணவர்களிற்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று (29.12.2004) காலை 10 மணிக்கு IIS பிரதான மண்டபத்தில் இடம்பெறவிருப்பதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(சி-40072) இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு உண்டு

1½ மாதம், ஒரு மாதம், ஒரு வாரம், ஒரு நாள் வயதுடைய நல்லின பேடு, சேவல் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

யாழ்.மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
தொலைபேசி இல.: 060 221 2926.

(40170)(26-13-19)

## விற்பனைக்கு

புதுவருடத்தை முன்னிட்டு விசேட கழிவு

நச்சு வேலை செய்யும் மிசின்கள் 10", 12",14", 16" ஆகியனவும் எலற்றிக் றில்லர்கள், றவுட்டர்கள், மாபிள் கட்டிங் மிசின்கள், கிறைண்டர்கள், அலுமினியக் கட்டிங் மிசின்கள், வளைவு வெட்டும் மிசின்கள், மரம் துண்டுபோடும் வாள், பிளாஸ்ரிக் எழுத்து - வெட்டும் மெசின்கள், ஸ்ராண்ட் றில்லர்கள், வெல்டிங் பிளாண்டு வகைகள், கடைச்சல் மிசின் மற்றும் சகல விதமான எலற்றிக் உபகரணங்கள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், M.D.F போட் பலகைகளும் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

சுதா ரேடேர்ஸ்,
இல.339, அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
கி.சுதாகரன்
T.P: 077 3107690.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 12 - 07 - 1961

உதிர்வு 29 - 11 - 2004

### திருமதி சந்திரா அற்புதலிங்கம்

நெடியகாடு, வல்வெட்டித்துறையை நிரந்தர வதிவிடமாகவும் யோகபுரம், மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட எமது வகுப்பு மாணவி செல்வி சாலினி அற்புதலிங்கம் அவர்களின் அன்புத் தாயாருமான திருமதி சந்திரா அற்புதலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தினையும் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
2005 - வர்த்தகப் பிரிவு,
மு/மல்லாவி மத்திய கல்லூரி, மல்லாவி.

(சி-40060)(26-19-15)

## நினைவலையில் ஐந்தாண்டுகள்



மண்ணில் 15 - 01 - 1977

விண்ணில் 25 - 12 - 1999

### சுதாஜினி சண்முகசுந்தரம்

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் திருவிளக்காய்
பாரில் வந்துதித்த அன்புச்செல்வமே!
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் உம்
நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது அம்மா!

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

— குடும்பத்தினர்.

(39958) (39-13-19-26)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜோர்ஜ் புலோமினா

சக்கோட்டை, பருத்தித்துறையைச் சொந்த இடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் மணற்குடியிருப்பு, முல்லைத்தீவைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி ஜோர்ஜ் புலோமினா (ஆசிரியை, கொக்குளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்கள் 26-12-2004 அன்று முல்லைத்தீவில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தின்போது அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஜோர்ஜ் அவர்களின் அன்பு மனைவியும் அமரர்களான அந்திரேசு - மார்த்தம்மா ஆகியோரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான மடுத்தீன் - ஆரோக்கியம் ஆகியோரின் அருமை மருமகளும் ரீதி, ரஜி, விஜி, மதி, நிதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ராயு, பாப்பா, நரேஷ், குமார், தூர்லைவ் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (29-12-2004) புதன்கிழமை புதுக்குடியிருப்பில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புதுக்குடியிருப்பு. (40187)(26-19-15) தகவல்: கணவர்.

## கண்ணீர் அஞ்சலி



### கணபதிப்பிள்ளை குணசிங்கம்

(முன்னாள் ப.நோ.கூ.ச. முகாமையாளரும், இயந்திரம்ஸ், ஓட்டோ சப்ளே நிறுவன முகாமையாளரும்)

குணசிங்கம் எனும் குணவாளன்
இவ்வுலகில்
நண்ணுவார்க் கெல்லாம் நலமே
செய்து வந்தான்
மண்ணுலகம் நீத்து மலரடியான்
தாள் சேர்ந்தான்
எண்ணும் பொழுதெல்லாம் எம்
இதயம் வலிக்கிறதே
கண் சுமந்த நீரை நிந்தனுக்கு
காணிக்கையாக்குகிறோம்
ஒரு நாள் லீவு எடுத்ததில்லை உன்
உயிர் பிரியும் வரை
ஒரு வருத்தம் சொன்னதில்லை உன்
உடல் சரியும் வரை.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓட்டோ சப்ளையர்ஸ்
நிர்வாகத்தினரும் தொழில் புரிபவர்களும்.

(40175)(26-13-19)

## ஓராந் திங்களில் உன்னை எண்ணி......



முளையாய் 20 – 08 – 1917

பழமாய் 29 – 11 – 2004

### திருமதி இரத்தினம் கனகரத்தினம்

*பழுத்த பழங்கள்*
*மரத்தில் இருப்பதில்லை - இது*
*இயற்கையின் நியதியம்மா!*
*நாலு தலைமுறையின் விருட்சம் நீ*
*ஆதலினால்*
*வாழ்வின் உன்னதங்கள் உன்*
*வசமாயின*
*சொர்க்கபுரியும் சுகமாயமையச்*
*சொகுசாகச் சென்றவள் நீ*
*அவ்வுலகும் உனக்கே அமைய இல்லை*
*அமைக்கத் தெரிந்தவள் நீ*
*என்றும் மகாராணியாய்*
*நித்தியானந்தப் புரவசத்தில்.....*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஞானபண்டித வித்தியாசாலை அருகே,
புது வீதி, கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(40059) (39-13-19-26)


பண்டிகைக் கால பரிசு மழை!




● முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20 கிராம், 10 கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக் குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கிகாரம் பெற்ற MMBL உபமுகவர்கள் ஊடாக பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரை தொடர்பு கொள்ளுங்கள் 011 2372 333

ரூபாய் 250,000 ற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்.

WESTERN UNION
பணப் பரிமாற்றம்
• நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
• இச் சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப் பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

AUTHORISED AGENT
MMBL
Money Transfer (Pvt) Ltd.
300, Galle Road, Colombo 3.
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
● அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

FLEX Graphic Lisence No. C/130/2004

# அனர்த்தங்களைத் தொடர்ந்து அரச அலுவலகப் பணிகள் ஸ்தம்பிதம்

கொழும்பு,டிசெ.29

நாட்டின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களைத் தொடர்ந்து நேற்றுமுன்தினம் அரச அலுவலகங்கள் அனைத்தும் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டன. கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஒரு சில வர்த்தக நிறுவனங்களைத் தவிர அனைத்து தனியார் நிறுவனங்களும் மூடப்பட்டிருந்தன.

கொழும்பில் இருந்து வெளியூர்களுக்கு வாகனப் போக்குவரத்து மிகவும் அரிதாகவே காணப்பட்டது. பாணந்துறை, களுத்துறை போன்ற தென்பகுதி நகரங்களில் இருந்து மட்டும் ஒரு சில தனியார் பஸ் வண்டிகள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்தன. எனினும், அவற்றில் பயணிகள் எண்ணிக்கையும் குறைந்தே காணப்பட்டது.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதி சோபையிழந்து காணப்பட்டது. ஆங்காங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் சேகரிக்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. கொழும்பு காலிமுகத்திடலில் கடற்படையினர் நிவாரணப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டிருந்தனர்.

தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களும, வானொலி நிலையங்களும் பொதுமக்களிடமிருந்து நிவாரணப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டிருந்தன.

தென்பகுதியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான தங்காலை, காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களுக்கு நேற்றுமுன்தினம் நண்பகல் சமைத்த உணவுப் பொருள்களும் உடுதுணிகளும் வழங்கப்பட்டன. எனினும், வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் வரை நிவாரணப் பொருள்கள் எதுவும் சென்றடையவில்லை.

வவுனியாவில் இயங்கிவரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக நிவாரணப் பொருள்களைக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பூநகரி போன்ற இடங்களுக்கு அனுப்பிவைத்துள்ளன.

எனினும், அவை தற்காலிக தேவையைக் கூட பூர்த்திசெய்வதற்குப் போதுமானதாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை போன்ற பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களும் வங்கிகளும் மூடப்பட்டிருப்பதால் பொதுமக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. (க-8)

## காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தின்போது படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றவர்களில் பதினொரு பேர் மேலதிக சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டனர்.

இவர்களுக்கு யாழ். வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. (8-7)

## இறந்த கால்நடைகளை அகற்ற விசேட செயலணி அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

யாழ். குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் கடல்கொந்தளிப்பில் சிக்கி உயிரிழந்த கால்நடைகளை அகற்றுவதற்கு விசேட செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் தெய்வேந்திரம் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி வடமராட்சி கிழக்கு மற்றும் பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற கடல்கொந்தளிப்பில் சிக்கிப் பெருமளவான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இதனால், அப்பிரதேசத்தில் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயம் இருப்பதாகவும் இதனையடுத்து குறிப்பிட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற கால்நடைகளை உடனடியாக அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் சுகாதாரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக சுகாதாரப் பரிசோதகர்களை உள்ளடக்கிய செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளுக்குச் சென்று அங்கு காணப்படும் இறந்த கால்நடைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று சுகாதாரத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.(8-7)

## திருவடிநிலைக் கடற்கரையில் கரையொதுங்கும் மிதிவெடிகள்

வலி.மேற்கு,டிசெ.29

சுளிபுரம் திருவடி நிலை கடற்கரையில் பெருமளவு மிதிவெடிகள் கரை ஒதுங்கியுள்ளன. இப பகுதிக் கடலுக்குள்ளும் பெரும் தொகையான மிதிவெடிகள் மிதக்கின்றன.

மிதிவெடிகள் கடற்கரையிலும் கடலுக்குள்ளும் காணப்படுவதனால் கடற்றொழிலாளர்களை இப்பிரதேசங்களுக்குள் செல்லவிடாமல் கடற்படையினர் தடுத்துள்ளனர்.

இதனால், கடற்தொழிலாளர்கள் தமது வலைகளையும் வள்ளங்களையும் தேடமுடியாமல் இருப்பதாகத் தெரியவருகின்றனர். (4-175)

## பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மருத்துவ மாணவர்கள் விரைவு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கையின் பெரும் சீற்றத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்க யாழ். மருத்துவபீட மாணவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்துள்ளனர்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் சென்றுள்ள இவர்கள் மருத்துவப் பொருள்களுடன் திருகோணமலைக்கு 60 மாணவர்களும், முல்லைத்தீவிற்கு 65 மாணவர்களும், மட்டக்களப்பிற்கு 75 மாணவ[illegible]ளும் [illegible]பளைப் பகுதிக்கு 25 மாணவர்களும் நேற்றுச் சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் தமிழீழ சுகாதார சேவையினருடன் இணைந்து அவசர மனிதாபிமான மருத்துவ வசதிகளை இரவு, பகலென்று பாராது மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (4-13)

## காயமடைந்தோருக்கு சிகிச்சையளிக்க வைத்தியர் குழு வன்னி சென்றது

யாழ்ப்பாணம்,டிசெ.29

முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்கவென யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து 10பேர் அடங்கிய குழு ஒன்று சென்றுள்ளது.

அந்த வைத்தியசாலைகளில் காயமடைந்தவர்களின் தொகை அதிகரித்துள்ளமையினாலும், போதிய வைத்தியாகள் அங்கு இல்லாமையாலும் இந்தக்குழு அங்கு புறப்பட்டுச் சென்றது. யாழ். போதனா வைத்திசாலையிலிருந்து சென்ற இக்குழுவினர் சில தினங்கள் அங்கு தங்கிநின்று சிகிச்சையளிக்கவுள்ளனர்.

இவர்களுடன் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து உதவிகளைச செய்துவருகின்றனர். (8-7-6)

## மலர்வதற்கு முன்னர் கருகிவிட்ட மேலும் சில மொட்டுக்கள்...

(படங்கள்: சிறி டிஜிற்றல் கலர் லாப்)













## ஜனவரி முதல் மின்விநியோகம்

தென்மராட்சி, டிசெ.29

தென்மராட்சி பிரதேசத்தின் மேலும் சில பகுதிகளுக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மின் விநியோகம் வழங்கப் படவுள்ளது.

கைதடி வடக்கு, நவபுரம், எழுதுமட்டு வாழ், எருவன் ஆகிய பகுதிகளுக்கே மின் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்விநியோகம் மேற் கொள்வதற்கான மின்மாற்றிகள் பொருத்தும் பணி முடிவடைந்துள்ளது.

(8-117)

## படகோட்டிகள் நடைமுறையைக் கடைப்பிடிக்க வலியுறுத்தல்

ஊர்காவற்றுறை - அனலைதீவு - எழுவைதீவு - நயினாதீவு பகுதிகளுக்கிடையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் படகுகள் உரிய நேர அட்டவணை மற்றும் நடைமுறைகளை கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் தவறும் படகு உரிமையாளருக்கு தண்டம் விதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதில் பயணிகள் சேவையில் ஈடுபட்டுவரும் படகு உரிமையாளர்கள், அனலைதீவு கிராமசேவை அலுவலர் வ.வடிவழகையன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(8-16)

வல்வெட்டித்துறை வைத்தியசாலையின்

## மார்பு நோய் சிகிச்சைப்பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டது

தென்மராட்சி,டிசெ.29

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் இயங்கி வந்த மார்பு நோய் சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இப்பிரிவில் கடமையாற்றிய ஊழியர்கள் வேறு ஆஸ்பத்திரிகளுக்குத் தற்காலிகமாக டிசெம்பர் ஆறாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

ஐந்து ஊழியர்கள் பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரிக்கும் மூன்று ஊழியர்கள் செம்பியன்பற்று ஆஸ்பத்திரிக்கும் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர்.

, மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்த வேளையில் 40 ஊழியர்கள் கடமையாற்றியதாகவும், இடமாற்றம், இளைபபாறல் ஆகியவற்றினால் எட்டு ஊழியர்களே எஞ்சியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(8-117)


## பிற்போடப்பட்டுள்ளது

ஜீவ ஒளி மிஷனால் இன்று (29-12-2004) புதன்கிழமை நடத்தவிருந்த ஒளிவிழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**ஜீவஒளி மிஷன்**
கந்தரோடை வீதி,
சுன்னாகம்.

(40190)(26-13-15-12)



## முக்கிய அறிவித்தல்
## அவசர கலந்துரையாடல்

பாதிப்புற்றிருக்கும் உடன்பிறப்புக்களுக்கு உதவும் வகையில் எமது கல்லூரி மாணவர்களும், கற்று வெளியேறிய மாணவர்களும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

காலம்: இன்று (29-12-2004) காலை 10 மணி
இடம்: புதிய உயர்கல்லூரி மண்டபம்

தலைவர்,
வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம்,
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்.

(40191)(26-12-13-15)



## பிறந்தநாள் வாழ்த்து



சரவணை மேற்கு
**சிவவாசகம் ஆனந்தராஜன்**
மண்டைதீவு
**சின்னத்துரை நாகேஸ்வரி**
தம்பதிகளின் ஏக புதல்வி

**ரம்யா**

தனது 14 ஆவது பிறந்த நாளை ஜேர்மனியிலுள்ள தனது இல்லத்தில் 29.12.2004 இன்று வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பி அரவிந் (ஜேர்மனி), அப்பம்மா (கனடா), அம்மப்பா (யாழ்ப்பாணம்) மற்றும் மாமாமார், பெரியப்பாமார்,சித்தப்பாமார், அத்தைமார் குடும்பத்தினர் அனைவரும் பல்லாண்டு காலம் நோய்நொடியின்றி சிறப்புடன் வாழ அன்புடன் வாழ்த்துகின்றனர்.

(39725)(12-13-15)

தகவல்:- ஆனந்தராஜன் (அப்பா-ஜேர்மனி).



எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவது நிச்சயம்

## விக்னா கல்வி நிறுவனம்

**A/L 2007** ஆரம்பம்: 02-01-2005 8மணி

### கலை, வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| Acc. -திரு.பாலவாசன் | Eco. -திரு.உதயன் |
| Com.- திரு.யசோ பிரிவு I | திரு.முரளி பிரிவு II |
| Log. -திரு.சயந்தன் | H/C.-திரு.பத்மராஜா |
| Tam.- திரு.குழந்தை பிரிவு I | திரு.லிங்கம் பிரிவு II |
| Geo. -திரு.பாபு | Hin. -திரு.N.T.தரன் |
| Hist.- திரு.பத்மன் | P/Sci.- திரு.ஸ்ரீரங்கநாத் |
| Chri.- திரு.வசந்தன் | Drama.- திரு.மதி |

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

(சி-40008)(26-12-13-15)


## முன்பள்ளிகளுக்கு நிதி உதவி

நெடுந்தீவு பிரதேச எல்லைக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இரு முன்பள்ளிகளுக்கு புலம் பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பினால் (IOM) திருத்த வேலைகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டுளளன.

நெடுந்தீவு கிழக்கில் அமைந்துள்ள குழந்தையேசு முன்பள்ளிக்கும், நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள சென்.ஜோன்ஸ் முன்பள்ளிக்குமே இவ்வாறு நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் குழந்தையேசு முன்பள்ளிக்கு 89 ஆயிரம் ரூபாவும், சென் ஜோன்ஸ் முன்பள்ளிக்கு 67ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

(8-112)

## பதிவுகாரர் அலுவலகம் இடமாற்றம்

தென்மராட்சி, டிசெ.29

சாவகச்சேரி, சங்கத்தானையில் இயங்கி வந்த சாவகச்சேரி பிரதேச விவாக, பிறப்பு, இறப்பு, பதிவுகாரர் அலுவலகம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சாவகச்சேரி புகையிரத நிலைய ஒழுங்கையில் உள்ள வீடொன்றுக்கு மாற்றப்படுவதாகப் பதிவுகாரர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார்.

(8-117)


## 3ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



**திருமதி செல்லம்மா பொன்னையா**

தோற்றம் : 21.05.1927
மறைவு : 29.11.2004

29.11.2004 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் நோயுற்று இருந்த வேளையில் உதவி புரிந்த யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் மற்றும் சக வைத்தியசாலை உத்தியோகஸ்தர்களிற்கும் மற்றும் பிரிவுச் செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, தந்தி மூலம் துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (29.12.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பவானி களஞ்சியம்
இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

- குடும்பத்தினர்.

(40163)(12-11-17)

# தாயக உறவுகள் தவிக்கின்றன; புலம்பெயர் தமிழரே உதவிடுவீர்!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர அழைப்பு

தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கும் பாரிய அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் உறவுகளுக்கு உதவுவதற்கு புலம்பெயர் புகலிட தமிழ்ச் சமூகமும் முன்வரவேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அழைப்பு விடுத்திருக்கிறது.

இதுதொடர்பாக நிறுவனப் பணிப்பாளர் கே.பி. ரெஜி விடுத்திருக்கும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு கரையோரக் கிராமங்களைத் தாக்கிய பெரும் கடற்கொந்தளிப்பு, வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களிற்கான உடனடி மனிதாபிமான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களிலும் தங்கியுள்ள சுமார் 5 லட்சம் பொது மக்களிற்கான உணவு, மருத்துவ உதவிகள், போக்குவரத்து மற்றும் தற்காலிக இருப்பிட உதவிகள் போன்ற அவசர மனிதாபிமான உதவிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.

எனினும், தற்போது ஏற்பட்டுள்ள பெருமளவிலான தேவைகளை எதிர்கொள்வதற்கு அனைத்துலக சமூகமும், புகலிட தமிழ் சமூகமும் பெருமெடுப்பில் உதவிடவேண்டும்.

தற்போது பல்வேறு சர்வதேச ஊடகங்கள் மற்றும் தமிழ் ஊடகங்கள் ஊடாக விடுக்கப்படும் இவ்வேண்டுதலில், இன்று ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதற்கு எம்மிடம் தற்போதுள்ள வளங்கள் போதுமானவையல்ல என்பதால் மிகப் பெருமளவிலான உடனடி உதவிகள் மூலமே அவசர உதவிகளை வழங்கிட முடியும்.

தற்போது இவ்வுதவிகளை வழங்கிட விரும்பும் தனிநபர்கள் பின்வரும் இணையத்தள வங்கி ஏற்பாடு ஊடாக உதவிகளை வழங்கிடலாம்.

**www.troonline.org** பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளை நிறுவனங்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் இவ் அவசரப் பணிகளில் இணைந்து செயற்படுமாறு அனைத்து மக்களையும் புனர்வாழ்வுக்கழகம் கோரியுள்ளது.

தற்போதுள்ள சூழலில் தாம் வாழும் நாடுகளில் உள்ள உதவி நிறுவனங்கள், தேவாலயங்கள், அரசு என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளை உடனடியாகக் கோருமாறு அனைத்துலக தமிழ்ச் சமூகத்திடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது. இதற்கான தகவல் மற்றும் உதவிகளை அவ்வவ் நாடுகளின் புனர்வாழ்வுக் கழக கிளைகள் வழங்கிடும்.

இதேவேளை, ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் தொடர்பான ஆரம்ப மதிப்பீட்டுப் பணிகளிலும் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4)

## காணாமற்போனோர் விவரம் யாழ்.செயலகம் திரட்டுகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடற்கொந்தளிப்பின்போது காணாமற்போனவர்கள் தொடர்பான கணக்கெடுப்புகள் யாழ்.மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் யாழ்.மாவட்ட செயலகத்தில் வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காணமற்போன உறவுகள் வேறு இடங்களில் உயிருடன் மீட்கப்பட்டால் அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி உறவுகளுடன் சேர்ப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-203-204)

## அவசர நிவாரணப் பணிகளில் தமிழர் தாயகப் பகுதிகள் புறக்கணிப்பு

### மட்டக்களப்பு எம்.பி. ஜோசப் குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.29

அவசரகால நிவாரணப் பணிகள் விடயத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனை உதவி வழங்கும் நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று அனைத்துக்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்நிவாரணப் பணிகள் தொடர்பாக பிரதமர் அலுவலகத்தில் கூடிக் கலந்தாலோசித்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் கலந்துகொண்ட ஜோசப் பரராஜசிங்கம் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது -

சுமார் இரண்டு மணிநேரமாக நடைபெற்ற இக்கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட அழிவுகள் பற்றி சிங்களக் கட்சிப் பிரதிநிதிகளும், அரச சார்பானவர்களும் எந்த வித அக்கறையும் கொள்ளவில்லை, இது பற்றி நான் அவர்களிடம் கேள்வி எழுப்பிய பின்பே சுமார் ஐந்து நிமிடங்கள் இந்த விவகாரத்தை வேண்டா வெறுப்பாகக் கதைத்தார்கள்.

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள அழிவுகள், ஆயிரக்கணக்கான உயிரிழப்புக்கள் குறித்து அலட்சியமான போக்கைக் கடைப்பிடிக்கும் அரசு மற்றும் சிங்களக் கட்சிகளின் நிலைப்பாட்டை சர்வதேச நிதி வழங்கும் நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முடிவுசெய்துள்ளது - என்றார். (8)

## சிகிச்சை பெறுவோரின் விவரம் யாழ்.ஆஸ்பத்திரியில் பார்வைக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் பெயர்ப் பட்டியல் பார்வைக்காக வெளிநோயாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் குடாநாட்டில் பல பாகங்களில் காயமடைந்தோர் யாழ்.வைத்தியசாலையின் விடுதிகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுடைய பெயர்கள் மற்றும் சிகிச்சை பெற்றுவரும் விடுதி இலக்கம் போன்ற விவரங்களோடு பட்டியல் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களின் உறவினர்கள், நண்பர்கள் பட்டியலைப் பார்வையிட்டு காயமடைந்தவர்களை உடனடியாக பார்வையிட வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (4-13)

## மட்டு. அரச கட்டுப்பாட்டுப் பகுதியின் மீட்புப் பணிகளில் விடுதலைப் புலிகள்

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டுள்ளார்கள்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் குறிப்பாக நாவலடிப் பிரதேசத்தில் இடிபாடுகளுக்குள் புதையுண்டு கிடக்கும் சடலங்களை மீட்கும் பணிகளில் 30 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிப் போராளிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் பானு, மாவட்ட தளபதி ராம், மாவடி முன்மாரி கோட்டத் தளபதி ரமணன் ஆகியோர் நாவலடிப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை நேரில் சென்று பார்வையிட்டார்கள்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை சென்று பார்வையிட்டார்.

கரையோரக் கிராமங்களிலிருந்து வெளியேறியுள்ள மக்களில் 75 ஆயிரம் பேர் வரை தமது கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் வந்துள்ளதாக மாவட்ட தளபதி ராம் தெரிவித்தார்.

50 இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்களிலும், தனியார் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டு, இவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாவலடி பிரதேசத்தில் சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட விடுதலைப் புலிப் போராளிகள் இராணுவத்தினரின் தேவைகளை அறிந்தும் உதவிகளைப் புரிந்தனர்.

கல்லடி இராணுவ முகாமில் கட்டட இடிபாடுகளை அகற்றி போக்குவரத்துப் பாதையைச் சீராக்குவதில் விடுதலைப் புலிகளின் புல் டோசர் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. (8)

## இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன

கொழும்பு,டிசெ.29

கடற்கொந்தளிப்பு காரணமாக இராணுவத்திற்கும் பாரிய இழப்புகள் எற்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

நாகர்கோயில், மணற்காடு, பருத்தித்துறை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, மாதகல் உட்பட 8 இராணுவ முகாம்கள் யாழ்.குடாநாட்டில் முற்றாகக் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

அத்தோடு, யாழ் குடாவின் கண்காணிப்பை உறுதிப்படுத்துமுகமாக அமைக்கப்பட்டிருந்த 44 கிலோ மீற்றர் நீளமான காவல்வேலியும் அதனோடிணைந்த மினிமுகாம்கள், காவலரண்கள், காவல்நிலைகள் என்பனவும் பேரலையால் முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 23-2 படைப் பிரிவு தலைமையகம் அமைந்திருந்த கல்குடா முகாம் தரை மட்டமாகி விட்டது. இதனைத் தவிர கஜுவத்தை, மாங்கேனி, கல்லடி, களுவன்கேணி ஆகிய இராணுவ முகாம்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

ஏராளமான இராணுவத் தளபாடங்களும் இதன் காரணமாக இழக்கப்பட்டுள்ளதோடு சேதமும் அடைந்துள்ளன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்கா வெளியிட்டுள்ள தகவலின்படி, 4 அதிகாரிகள் உட்பட 57 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளார்கள். 2 அதிகாரிகள் உட்பட 27 பேர் காணாமற்போயுள்ளார்கள். 6 அதிகாரிகள் உட்பட 261 பேர் காயமடைந்துள்ளனர். (8)

## வைத்தியசாலைகளுக்கு அவசர அவசரமாக மருந்துப் பொருள்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு இரண்டு லொறிகளில் அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டன.

மேலும், ஒரு லொறியில் வவுனியா வைத்தியசாலைக்கு மருந்துப்பொருள்கள் அனுப்பப்பட்டன.

50 பைந்து இரத்தம் நேற்றுமுன்தினம் காலை வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அவசரமாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.,

வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டின் காரணமாக வவுனியா மாவட்ட சுகாதார சேவைகளுக்கு பொறுப்பான பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் காந்த லியனகேவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு மருந்துத் தேவையை அறிவித்தபோது உடனடியாகவே வன்னிக்கு மருந்துகளை அனுப்பிவைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு பகுதிகளில் கிணற்று நீர் - கடற்கொந்தளிப்பினால் பெரிதும் மாசடைந்துள்ளது.

இதனால், வன்னிக்கு வவுனியாவிலிருந்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய ஒரு குழுவினர் நீர் சுத்திகரிக்கும் குளோரின் மருந்துகளுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (8)

## அதிகாரப் பகிர்வுப் பாகுபாடுகளை நிவாரணப் பணிகளில் காட்டக்கூடாது

### தேசிய சமாதானப் பேரவை வலியுறுத்து

கொழும்பு,டிசெ.29

அதிகாரத்தைப் பகிர்வதிலுள்ள பாகுபாடுகளை தற்போதைய அனர்த்தத்தில் அழிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் நிவாரணப் பணிகளில் காட்டக்கூடாது என தேசிய சமாதானப் பேரவை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளை இந்த நிவாரணப் பணிகளில் முக்கிய பங்குதாரர்களாக்குவது தவிர்க்கப்பட முடியாதது. இந்தப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் இணைத்து ஈடுபடுத்துவதே நிவாரணப் பணிகள் முழுமை பெற உதவும்.




அதிகாரப் பகிர்வு மற்றும் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் இவ்விவகாரத்தில் களையப்பட்டு அல்லலுறும் மக்களிற்கான உதவிகளை வழங்குவதே முதன்மைப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பகுதிகள் போர் நடவடிக்கையில் பாதிக்கப்பட்டவை என்பதோடு, வறுமைக்கோட்டின் கீழான மக்களைக் கொண்ட பிரதேசங்களாகவும் இருந்த காரணத்தால் இவ்வாறான பேரலையின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கான வசதிகளை குறைந்தளவில் கொண்ட பிரதேசங்களாகவே அவை இருந்திருக்கும்.

இவ்வாறான நிலையில், மேற்படி பகுதிகளின் நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகளையும் பிரதான பங்காளிகளாக இணைக்க வேண்டும் என்றே சமாதானப் பேரவை நம்புகின்றது. இவ்விவகாரத்தில் அரசும் விடுதலைப் புலிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட வேணடிய சூழ்நிலையை இந்தப் பேரனர்த்தம் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகளிற்கு நிவாரணம் தேடுவதே முதற்பணியாக இருக்க வேண்டுமே தவிர, அதிகாரத்தை யார் வைத்திருக்கிறார்கள் என்பதல்ல - என்றுள்ளது. (8)

## ஏலவிற்பனை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் இன்று புதன்கிழமை இடம்பெறவிருந்த ஏலவிற்பனை தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் ஏலவிற்பனை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார் (8)

வடமராட்சி வடக்கில்

# தத்தம் வீடுகளில் உடைமைகளை மீட்டுவர மக்களுக்கு அனுமதி !

வடமராட்சி, டிசெ.29

வடமராட்சி வடக்கு கரையோரப்பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட வீடுகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்று பொருள்களை எடுத்துவர நேற்று அனுமதி வழங்கப்பட்டது.

பொருள்கள் களவு போவதை தடுப்பதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு எவரும் செல்ல விடாமல் இளைஞர்கள் ஒன்று திரண்டு இரவு பகலாக கண்காணித்து வந்தனர்.

இடம் பெயர்ந்தோர்முகாங்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருந்த பாதிக்கப்பட்ட மக்கள் நேற்றைய தினம் பொருள்களை எடுத்துவந்தனர்.

பொருள்களை எடுக்காதோர் வசதிகருதி தொடாந்தும் இப்பகுதியில் பாதுகாப்பு கண்காணிப்பு நடவடிக்கைகளை இளைஞர் குழுவினர் மேற்கொண்டுள்ளனர். (4-173-70)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலைய மூடாக தமிழ்மொழி மூலம் நடத்தும் இரண்டு ஆண்டு கால மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை .15.02.2005 அன்று தொடங்கி இரண்டு கல்வியாண்டுகள் நடைபெறும்.

இக்கற்கைநெறிக்குப் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு உளச்சார்பு பரீட்சை மூலமும் நேர்காணல் மூலமும் திறமையடிப்படையில் அமையும்.

*கட்டண விவரம்:*

பதிவுக்கட்டணம் - ரூபா 1,000/-
கற்கைநெறிக் கட்டணம் - ரூபா 30,000/-
மீளப்பெறக்கூடிய வைப்பு - ரூபா 1,000/-

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் பதிவு மேற்கொள்ளும் பொழுது இருபத்திரண்டாயிரம் ரூபாவும் இரண்டாம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு பத்தாயிரம் ரூபாவுமாகச் செலுத்தப் படவேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50/- கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு 20.01.2005 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப் படல் வேண்டும்.

துணைவேந்தர்.
28.12.2004 (சி-40078) (24-19-15)


### மேலும் ஒரு வைத்தியர்குழு நேற்று கிளிநொச்சிக்கு

வன்னிப் பிரதேச கடல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுப் படுகாயமடைந்தவர்களின் சிகிச்சைகளை மேற்கொள்ளும்பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து மேலும் ஒரு வைத்தியர்குழு நேற்று கிளிநொச்சி வைத்தியசாலைக்கு புறப்பட்டுள்ளது.

சத்திரசிகிச்சை, முறிவுநெறிவு சத்திரசிகிச்சை நிபுணர் உட்பட சில டாக்டர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர், பரிசாரகர்கள் அடங்கிய 16 பேர் இக்குழுவில் அடங்குவர். (4-15)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2004/2005

அனுமதித் தேர்வு

30.12.2004இல் நடைபெறவிருந்த மேற்படி உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதித் தேர்வு தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

துணைவேந்தர்.
28.12.2004 (சி-40079) (24-19-15)





## விற்பனைக்கு

DISH TV & KU BAND DTH

| | |
|---|---|
| DISH TV<br>ESPN, STAR SPORT,<br>SUN TV, JEYA TV<br>உட்பட 100 CHANNELS<br>DISH, LNBF, DECORDER | Rs. 20,000/- |
| KU BAND FREE CHANNELS<br>SUN TV, பொதிகை உட்பட<br>33 CHANNELS<br>DISH, LNBF, RECEIVER | Rs. 14,000/- |
| EUROSTAR 90cm Dish<br>EUROSTAR RECEIVER<br>EUROSTAR LNBF<br>உட்பட SYSTEM<br>(ONE YEAR GUARANTEE) | Rs. 19,000/- |
| ALFA GOLD RECEIVER<br>EUROSTAR DISH 65 cm<br>EUROSTAR LNBF<br>உட்பட SYSTEM<br>(ONE YEAR GUARANTEE) | Rs. 17,000/- |

DISH, RECEVIER, LNBF தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
KU BAND DISH - Rs.3,500/- இருந்து

TEL.: 021 2263970
0777-730332

## ஜமுனா ஸ்ரோர்ஸ்

No. 3, நெல்லியடிச் சந்தி,
நெல்லியடி.

(40198) (24-19-15)


வீண் விரயத்தைத் தடுக்குமுகமாக

# கருமபீடத்தின் ஊடாகவே சமைத்த உணவை வழங்குக

## இளம்பரிதி அறிவுறுத்து!

வடமராட்சி,டிசெ.29

இடம்பெயர்ந்தோருக்குச் சமைத்த உணவை வழங்கும் பொது அமைப்புகள், நிறுவனங்கள், தனியார்கள் தத்தம் பகுதிப் பிரதேச அரசியல் துறை ஊடாக நெல்லியடியில் அதற்கென அமைக்கப்பட்டுள்ள கருமபீடத்தில் ஒப்படைக்குமாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

இக்கருமபீடத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது மேலும் கூறியதாவது:-

இரண்டொரு தினங்களில் பருத்தித்துறையில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களை உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களும் கரவெட்டி, மருதங்கேணி இடம்பெயர்ந்தோர் முகாம்களை வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் பொறுப்பேற்கும்.

அதுவரை இக்கருமபீடமே இடம்பெயர்ந்தோர்களுக்கான நலன்களைக் கவனிக்கும். அரச சார்பற்ற நிறுவனங்களின் பொறுப்பில் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் பொறுப்பளிக்கப் பட்டாலும் இக்கருமபீடம் பின்னூடலாக இருநது நடவடிக்கைகளைக் கண்காணித்துவரும்.

முகாம்களில் உள்ளோருக்கு இக்கருமபீடம் இயன்ற உதவிகளை வழங்கிவருகின்றது. மேலும் குழந்தைகளுக்கான போசாக்குணவு, மருந்து வகைகள், நுளம்புத்திரிகள், பாத்திரங்கள், பெட்சீற், பாய்கள் போன்றவற்றை வழங்குமாறு பிரதேச செயலர்கள் ஊடாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பளை மகாவித்தியாலயத்தில் உள்ள இடம்பெயர்ந்தோருக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோர் சமைத்த உணவுகளையும் உலர் உணவுகளையும நேரடியாக வழங்கலாம் எனவும் அவர் தெரிவித்தார். (4-173-70)


# ST. PATRICK'S COLLEGE

## OLD - BOYS' ASSOCIATION, JAFFNA

THE X'MAS CAROL AND JOINT GET- TOGETHER OF THE O.B.A. - S.P.C. AND O.G.A. - H.F.C. JAFFNA

SCHEDULED TO BE HELD ON 30.12.2004 HAS BEEN CANCELLED IN VIEW OF THE CURRENT SITUATION IN THE PENINSULA.

*No. 59, St. Patrick's Road, Jaffna.*

S.Mariathas
Gen.Secretary
O.B.A. - S.P.C.
Jaffna.

(40195) (24-19-15)


## 10ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு 08 - 06 - 1908



இறப்பு 20 - 12 - 1994

அமரர் மு.க.சின்னையா

ஆண்டுகள் பத்து சென்றாலும்
எங்கள் நினைவுகளில் என்றென்றும்
உங்களை நினைவு கூர்ந்து வாழும்...

*புதிய செங்குந்த வீதி,*
*சட்டநாதர் றோட்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

(40196) (24-19-15)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சபாபதிப்பிள்ளை இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர்)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை இராஜசிங்கம் 26.12.2004 ஞாயிற்றுக் கிழமை இரவு காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் இராஜேந்திரா (முகாமையாளர், இலங்கை வங்கி), இராஜலக்சுமி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகபூஷணி, அருள்முகவரதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராஜசுந்தரம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராஜ்நாராயணன் (ஆஸ்திரேலியா), விமலன் (மருத்துவ பீடமாணவன்), கஜேந்திரன் (விஞ்ஞான பீட மாணவன்), அகிலன் (ஆஸ்திரேலியா), காண்டீபன் (ஆஸ்திரேலியா), கல்யாணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2004) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துன்னாலை, ஓடைக் காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்திரன் அம்மன் கோவிலடி,*
*துன்னாலை வடக்கு,*
*கரவெட்டி.*

(40199) (24-19-15)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தர் வைரவநாதன்

(முன்னாள் குமுதினி படகுச் சேவை ஊழியர்)

நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் வைரவநாதன் அவர்கள் 28.12.2004 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.12.2004) புதன்கிழமை மாலை 5 மணிக்கு செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

*இல.4, பெந்திக்கோஸ் ஒழுங்கை,*
*கண்டி வீதி.*
*யாழ்ப்பாணம்.*

(40207)(24-19-15)

தகவல்:
மா.மங்கையர்க்கரசி
(மகள்).

### ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பால்மா

கடற்கொந்தளிப்பு அனர்த்தங்களால் பாதிக கப்பட்டு அகதிகளான பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களின் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வேண்டிய பால்மா வகைகள், உடுபுடைவைகள் யாவும் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையால் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

பணிமனை சகல தரப்பு உத்தியோகத்தர்களினால் மனமுவந்து அளிக்கப்பட்ட சுமார் 65 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இப்பொருள்களை சுகாதார சேவைகள் பிரிவு மாகாணப் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் இதெய்வேந்திரன் தலைமையிலான குழுவொன்று நேற்று பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்தது.

இப்பொருள் யாவும் சுகாதார வைத்தியப் பணிமனை மூலம் அக்குழந்தைகளைச் சென்றடையும் என சுகாதார சேவைகள் பணிமனை வட்டாரத்தில் இருந்து தெரிவிக்கப்பட்டது. (4-15)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சை

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.தா. சிவபாதம் நாடாவெட்டி பற்சிகிச்சைப் பிரிவினை ஆரம்பித்து வைத்தார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். பிராந்திய பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் வீ.ஆர்.டேவிட், தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளர் ஈஸ்வரன், வைத்தியசாலை பொறுப்பாதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாகன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (4-117)

# தெற்கில் நிகழ்ந்த அனர்த்தத்தின் விளைவுகள்



மொறட்டுவ கடற்கரையில் இருந்த வீடுகள் சின்னாபின்னமாக...



தெஹிவளை ரயில்பாதையின் தோற்றம் இது..



காலி வீதியில் குவிந்து கிடக்கும் வீட்டுக் கூரைகள்...



மொறட்டுவப் பகுதியில் தரைமட்டமான குடிசைகளின் காட்சி...

## முதல் அலையைக் கண்டு மிரண்டோம் அடுத்த அலை ஆள்களை விழுங்கியது!

### கீரிமலையில் உயிர் தப்பியவர் பேட்டி

பாரிய இரைச்சலுடன் எழுந்து வந்த பேரலை ஒன்று நாங்கள் பிதிர்க்கடன் நிகழ்த்திக்கொண்டிருந்த மண்டபத்துக்குள் புகுந்து பொருள்களை வாரி இழுந்துச் சென்றது. அடுத்த சில நிமிடங்களில் அடுத்த அலைவந்து ஆள்களை அள்ளிச் சென்றது.

- இவ்வாறு கீரிமலைப் பகுதியில் தனக்கு நேர்ந்த அனுபவத்தை விவரித்தார் நாயன்மார் கட்டைச் சேர்ந்த பசுபதி.

கீரிமலையில் கடந்த ஞாயிறன்று நிகழ்ந்த கடல் அனர்த்தத்தில் உயிர் தப்பியவர்களில் இவரும் ஒருவர்.

அவர் கூறியதாவது:-

நீர்வேலியைச் சேர்ந்த ஒருவரின் பிதிர்க்கடனை நிறைவேற்றுவதற்காக நாம் கீரிமலைக்குச் சென்று இருந்தோம். எங்களுடன் வந்தவர்களில் ஒரு பகுதியினரை குளிக்கும்படி கூறிவிட்டு நாம் மடத்தில் நின்று பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக்கொண்டு இருந்தோம்.

திடீரென மடத்தினுள் வந்த பேரலை மடத்தினுள் வைக்கப்பட்டு இருந்த கும்பங்கள், உட்பட அனைத்துப் பொருள்களையும் அடித்து வாரிச் சுருட்டிச்சென்றது. உடனேயே நாம் அந்த இடத்தை விட்டு ஓடிவந்து தூரத்தில் நின்றோம். மீண்டும் ஒரு பேரலை தொடர்ச்சியாக வந்தது. அந்த நேரம் பலர் அடித்து இழுத்துச் செல்லப்பட்டார்கள்.

நாங்கள் வாகனங்களைக்கூட தூரவிட்டுச் சென்றமையால் எமது வாகனங்கள் அடித்துச் செல்லப்படவில்லை. இதே நேரம் எம்முடன் வந்தவர்களில் ஐந்து இளைஞர்களை கடலலை அடித்துச் சென்றது. சிறிய பிள்ளைகள் பத்துக்கு மேற்பட்டவர்கள் வந்தபோதிலும் நாம் நீராட பிள்ளைகளை இறங்கவேண்டாம் எனத் தடுத்துவிட்டோம். அதனால், பிள்ளைகள் காப்பாற்றப்பட்டார்கள் - என்று தெரிவித்தார்.

இதேநேரம் பூநகரியில் இருந்து பிதிர்க்கடன் நிறைவேற்ற வந்தவர்களில் ஒருவர் கூறும்போது-

நாம் சற்று முன்னதாகக் குளித்துவிட்டு கேணிப் பகுதியில் இருந்துவெளியேறிவிட்டோம். ஆனாலும் எம்முடன் வந்த ஒருவர் உடைகளைப் போடச் சுணங்கியமையினால் அவரின் உடைகளும் தேசிய அடையாள அட்டையுமே அடித்துச்செல்லப்பட்டன - என்று தெரிவித்தார். (ஜ-86)

## மிதிவெடிகளும் சிதறுண்டன கவனம்!

யாழ்ப்பாணம்,டிசெ.29

கடல் பூகம்பத்தால் கடற்கரையோரப் பிரதேசங்களில் படையினரின் பாதுகாப்புக்காகப் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் பல இடங்களிலும் சிதறுண்டுள்ளன - என்று தெரிவிக்கப்படுகிறது.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதிகளில் படைநிலைகள் அமைந்த இடங்களில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளே சிதறுண்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மிதிவெடிகள் கடற்கரையோரவீதிகளிலும் பொது இடங்களிலும் சாதாரண பொருள்போல் காணப்படுவதால் மிகுந்த அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர். (ஜ-185)

## பூமியதிர்ச்சி ஓரிடம், அழிவுகள் வேறிடம்; இம்முறை மட்டுமே இப்படி நடந்ததாம்!

ஒவ்வொரு தடவையும் பூமியதிர்ச்சி ஏற்படுகின்றபோது அதன் மையப்பகுதிகளிலேயே பாதிப்புக்களும் எதிர்விளைவுகளும் அதிகமாக இருப்பது வழக்கம்.

ஆனால், ஓர் இடத்தில் பூமியதிர்ச்சி இடம்பெற்றவேளை, அதன் பாதிப்புகளும் எதிர்விளைவுகளும் இன்னோரிடத்தில் ஏற்பட்டிருப்பது இதுவே முதற்தடவையாகும் என்று பூகோள ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பூமியதிர்ச்சி எங்கு மையம் கொண்டிருக்கின்றதோ அங்குதான் அழிவுகள் அதிகளவில் ஏற்படுவது வழக்கம். ஆனால், இம்முறை பூமியதிர்ச்சி இந்தோனேசியாவில் மையங்கொண்டிருந்த போதிலும் அங்கு உயிரிழப்புக்களும் சேதங்களும் பெரியளவில் ஏற்படவில்லை.

அங்கு ஏற்பட்ட அதிர்ச்சியின் அதிர்வலைகள் அதனை அண்டியுள்ள இந்தியா, இலங்கை போன்ற நாடுகளைக் கடுமையாகத் தாக்கியிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-4)

## தொழில் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வரவுச் சான்றிதழ் விநியோகம்

இரண்டாவது தொகுதியில் பயிற்சி பெறும் அரச தொழில் பட்டதாரி பயிலுநர்களுக்கு வரவுச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளன.

பட்டதாரிப் பயிலுநர் பயிற்சி நிலையங்களில் இணைப்பாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் வரவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை, இரண்டாவது தொகுதியில் பயிற்சி பெறும் அரச தொழிற்பட்டதாரி பயிலுநர்களின் வரவு விவரங்களையும் -

வளவாளர்கள், இணைப்பாளர்கள், உதவியாளர்களது விவரங்களையும் இன்று புதன் கிழமை மாலைக்குள் ஒப்படைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

32 பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி பெறும் பட்டதாரிகளுக்குரிய டிசெம்பர் மாதக் கொடுப்பனவு எதிர்வரும் 30 ஆம், 31 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளன. (ஜ-185)

### இது வேடிக்கை பார்க்கும் நேரமல்ல

## எங்கெல்லாம் செல்லமுடியுமோ அங்கெல்லாம் சென்று உதவுங்கள்!

### தங்கம்மா அப்பாக்குட்டி வேண்டுகோள்



எம்மண்ணில் பாரிய மனிதப் பேரவலம் நிகழ்ந்துள்ளது. அதனால் எங்கெல்லாம் எம்மால் செல்லமுடியுமோ அங்கெல்லாம் சென்று உதவி செய்தல் வேண்டும். இந்த அவலநிலைக்கு உங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்யுங்கள்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவி தங்கம்மா அப்பாக்குட்டி.

ஆலயத்தில் வழமையாக செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெறும் உரை நிகழ்வின்போதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

இது வேடிக்கை பார்க்கும் நேரமல்ல. வேதனை அடையும் நேரம். இந்த மண்ணில் ஏற்பட்ட அவலத்தில் நாமும் பங்குகொண்டு பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுதல் வேண்டும்.

எங்களுடைய இந்த மண்ணில் ஏற்பட்டுள்ள அவலத்தைப் பற்றி நாம் சிந்தித்துச் செயற்பட வேண்டும். எங்கள் உறவுகள், பிஞ்சுக் குழந்தைகள் என எல்லோரும் கடல் அன்னையின் சீற்றத்துக்கு ஆளாகிவிட்டனர்.

இயற்கையின் சீற்றம் எங்களைச் சோதித்துவிட்டது. இயற்கை எங்களை இப்படிச் சோதிக்கும்போது நாம் எதுவுமே செய்துவிடமுடியாது. இந்த இயற்கையின் கோபத்தால் மண்ணில் நல்லபடி வாழ்ந்துகொண்டிருந்த மக்கள் பாரிய அவலநிலைக்கு ஆளாகிவிட்டனர்.

இந்த அவலநிலைக்குக் காரணம் என்னவென்று உறுதியாகச் சொல்லமுடியாது. இந்த அவலங்கள் இடைக்கிடையில் எம்மைத் தாக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்தவகையிலே நாம் முதலில் அல்லற்பட்டோருக்கு உதவிசெய்தல் வேண்டும். எல்லோரும் ஒன்று சேர்ந்து உதவிக்கரம் நீட்டுதல் வேண்டும். இந்த அவலநிலைக்கு உங்களால் முடிந்த பங்களிப்பைச் செய்தல் வேண்டும் - என்று தங்கம்மாஅப்பாக்குட்டி தெரிவித்தார். (ஜ-203)

### சடலங்களுடன் பிரேதப்பெட்டிகள்

கடற்கொந்தளிப்பினால் பலியானவர்களின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை, மந்திகை அரசினர் சுகாதார வைத்தியசாலையில் வைத்து பிரேதப்பெட்டிகளை வழங்கிவருகின்றது.

சவச்சாலையில் சடலங்களை அடையாளம் காட்டியதும் ஒவ்வொரு சடலங்களுக்கும் பிரேதப் பெட்டிகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் அந்த இடத்திலேயே நின்று இதற்கான ஒழுங்குகளை உடனுக்குடன் கவனித்து வருகிறார். (4-173-70)

# 10 நாள் நிரம்பிய கைக்குழந்தை உட்பட ஒன்பது பேரின் சடலங்கள் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.29

மணற்காட்டுப் பகுதியில் நேற்று நண்பகல் வரை பத்துநாள் கைக்குழந்தை உட்பட ஒன்பது பேருடைய சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடற்கொந்தளிப்புக் காரணமாக மணற்காட்டுப் பிரதேசத்தைச் சேர்ந்த 75 பேர்வரை காணாமற்போயிருந்தனர். அவர்களில் ஏற்கனவே 52பேருடைய சடலங்கள் மீட்கப்பட்டன.

எஞ்சியவர்களை மீட்கும் பணிகளில் விடுதலைப் புலிகள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சிக் கிளையினர், குருநகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தினர் மற்றும் யாழ். மாவட்ட மாணவர் ஒன்றியத்தினர் ஆகியோர் நேற்று ஈடுபட்டனர்.

இந்த மீட்புப் பணியின்போது கடற்கரை மற்றும் சவுக்கங்காடு ஆகியவற்றிலிருந்தே பத்துநாள் கைக்குழந்தை உட்பட 9 பேரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டு, அப்பகுதி கிராம சேவையாளர் தோமஸ் யூட் முன்னிலையில் மணற்காடு சேமக்காலையில் புதைக்கப்பட்டன.

காணாமல்போன மிகுதி 21 பேரையும்தேடி மீட்கும் பணி துரிதமாக இடம்பெற்று வருகின்றன. காணாமற்போனவர்கள் பெரும்பாலும் உயிரிழந்திருக்கலாம் என்றும் அவர்களுடைய சடலங்கள் அப்பகுதியிலுள்ள சவுக்கங்காடுகளில் ஒதுங்கியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எனினும் - அப்பகுதியில் மிதிவெடி அபாயம் இருப்பதால் அங்கு மீட்புப் பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும், தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் மற்றும் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் நேற்றுப் பார்வையிட்டனர்.

மணற்காட்டுப் பகுதியில் நேற்று மீட்கப்பட்ட சடலங்களின் விவரம் வருமாறு:-

ஆ.திரேசம்மா (வயது 83), பன்னீர்ச்செல்வம் சந்திரா (வயது 40), அவரது மகனான பன்னீர்ச்செல்வம் - டிலக்ஷன் (வயது 8), வெஷிங்டன் ரசிக்கா (வயது 12) -

மதியழகன் - மயூரினா (வயது 7), ரவி அன்ரனி (வயது 2), ரவி- அம்மன் (வயது 38), எட்மன்ராஜா - பிரியா (10நாள்கள்), இராசநாயகம் ரதீபன் (வயது 9), எட்மன்ராசா நிதர்சனா (வயது 10), செபஸ்தியன் சுசிலா (வயது 8).(4-5-70)

## அனலைதீவு துறைமுகம் வரைக்கும் பஸ்சேவை நீடிப்பு

அனலைதீவில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்ஸினை அனலைதீவு இறங்குதுறை வரைக்கும் சென்றுவருவதற்கு கடற்படையினர் தற்பொழுது அனுமதியளித்துள்ளனர்.

மேற்படி இறங்குதுறைக்கு பஸ்செல்வதாயின் கடற்படையினரின் முகாம் ஊடாகவே செல்லுதல் வேண்டும். இந்த முகாம் இறங்குதுறையில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் இந்த முகாம் ஊடாக பஸ் இறங்குதுறைவரைக்கும் சென்றுவருவதற்குக் கடற்படையினர் அனுமதியளிக்கவில்லை. இதனால் பொதுமக்கள் இறங்குதுறையில் இருந்து பொருள்களைச் சுமந்த வண்ணம் சுமார் 500 மீற்றர் தூரம் நடந்துசென்று கடற்படையினரின் சோதனைச் சாவடியைத் தாண்டியே பஸ்ஸில் ஏறுதல்வேண்டும்.

இதனால் நோயாளர்கள், பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். இது குறித்து அனலைதீவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.பரத்துவாசன், கடற்படையினரின் முகாம் பொறுப்பதிகாரியிடம் கலந்துரையாடியதையடுத்து இறங்கு துறைவரைக்கும் பஸ் சென்று வருவதற்குக் கடற்படையினர் அனுமதியளித்துள்ளனர்.(எ-16)

## வடமராட்சியில் இதுவரை 20 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

### அவர்கள் 35 நலன்புரி நிலையங்களில் தஞ்சம்

வடமராட்சி,டிசெ.29

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த 20 ஆயிரத்துக்கு அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 35 நலன்புரி நிலையங்களில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பருத்தித்துறைப் பிரிவில் 10 நிலையங்களிலும் கரவெட்டிப் பிரிவில் 19 நிலையங்களிலும் சாவகச்சேரிப் பிரிவில் 6 நிலையங்களிலும் வைத்து இவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இதனை விட பளை மகாவித்தியாலயத்திலும் தனியார் நலன்புரி நிலையம் ஒன்றுள்ளது. (4-173-70)

## அள்ளுண்டுபோன ஆயுதங்களைத்தேடி கடற்கரைகளில் படையினர் வேட்டை!

யாழ்ப்பாணம்,டிசெ.29

வடமராட்சிக் கரையோரப் பிரதேசங்களில் கடற்கொந்தளிப்புக் காரணமாக அள்ளிச்செல்லப்பட்ட ஆயுத தளபாடங்களைத் தேடும் பணியில் இராணுவத்தினர் நேற்று முழு வீச்சில் ஈடுபட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் வடமராட்சிக் கரையோரப் பிரதேசத்தில் காணப்பட்ட பிரதான கடற்படை முகாம் உட்பட பல காவலரண்கள் கடல் நீரால் அள்ளிச் செல்லப்பட்டமை தெரிந்ததே.

அது மட்டுமல்லாது, மணற்காட்டுப் பகுதியில் இருந்த பிரதான இராணுவ முகாமும் முறறாகக கடல் நீரால் அடித்துச செல்லப்பட்டது.

அவற்றிலிருந்த பெருமளவான ஆயுதங்களும் - இராணுவ தளபாடங்களும் அள்ளுண்டு சவுக்கம் காடுகளிலும் மற்றும் மக்களின் குடியிருப்பு இடிபாடுகளுக்குமிடையில் சிக்குண்டுள்ளன.

இவற்றைத் தேடும் முயற்சிகளில் பெருமளவான இராணுவத்தினரும் கடற்படையினரும் மணற்காடு, கற்கோவளம் மற்றும் முனை ஆகிய பகுதிகளில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது.

இதேவேளை, இப்பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டவர்களால் மீட்கப்பட்ட சில வெடிபொருள்கள் இராணுவத்திடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடற்கரையோரங்களில் இராணுவ சீருடைகள், காலணிகள் மற்றும் இதர பொருள்கள் சிதறிக் காணப்படுகின்றன.

வடமராட்சிக் கரையோரப்பகுதிகளில் இருந்து காணாமற்போன கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் 40 பேருடைய சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் சிலரைக் காணவில்லை என்றும் அவர்களை மீட்கும் பணி தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (4-5-70)

## ஊர்காவற்றுறையில் 155 குடும்பங்கள் இடம்பெயர்வு

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடல் கொந்தளிப்பு மீண்டும் ஏற்படலாம் என்ற அச்சத்தின் காரணமாக ஊர்காவற்றுறை கரையோரப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர்.

ஊர்காவற்றுறை ஊருண்டி குடியிருப்புப் பகுதியில் கடற்கரையோரமாக வசிக்கும் சுமார் 25 குடும்பங்கள் வரை ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தில் தங்கியுள்ளனர்.

அதேபோன்று, மெலிஞ்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த சுமார் நூற்றிமுப்பது குடும்பங்கள்வரை இடம்பெயர்ந்து ஊர்காவற்றுறை செபஸ்தியார் ஆலயத்தில் தங்கியுள்ளன. இவர்கள் பகல் பொழுதை தமது வசிப்பிடங்களில் இருப்பதுடன், இரவுப் பொழுதை மேற்படி இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (எ-16)








இயற்கையின் பேரழிவினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு உதவும்பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையின் ஏற்பாட்டில் நேற்று ஒருதொகுதி பொருள்கள் அங்கு அனுப்பிவைக்கப்பட்டன. யாழ்.மடத்தடிச் சந்தியிலிருந்து உதவிப் பொருள்களை ஏற்றிய வாகன அணி புறப்படத் தயாராவதையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் அவற்றை அனுப்பிவைப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கவிதரன்)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் 6,000 பேரைக் காணோம்

மட்டக்களப்பு,டிசெ.29

பேரனத்தத்தை விளைவித்த சுனாமி கடற்கொந்தளிப்பினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரம்பேரை இன்னும் காணவிலலை என்று தெரிவிக்கப்படுகின்றது. நேற்று மதியம்வரை 873 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் பல மீட்கப்படாமல் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் இருந்து 54 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மீட்கப்பட்ட சடலங்களில் 253 சடலங்கள் உறவினர்களாலும் நண்பர்களாலும் அடையாளம காணப்பட்டன என்றும் மட்டக்களப்பு வைத்தியசாலை தெரிவித்தது.

மணித்தியாலத்துக்கு மணித்தியாலம் மேலும் சடலங்கள் வைத்தியசாலைக்கு வந்து கொண்டிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அடையாளம் காணப்படாத 350 சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி, முகத்துவாரம், டச் பார், சீலமுனை மற்றும் நாவற்குடா ஆகிய கிராமங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நாவலடிக் கிராமம் முற்றுமுழுதாகக் கடல் நீரில் அடித்துச் செலலப்பட்டுள்ளது.

(க-3)

## வர்த்தகவங்கியின் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.29

வர்த்தக வங்கியின் யாழ்.கிளையில் வாடிக்கையாளர் சேவை நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெறும் என கிளை முகாமையாளர் தெரிவித்தார்.

(எ-3)

# வேண்டுகோள்

**பெட்டியுடன் கூடிய உழவு இயந்திரங்கள் மற்றும் தண்ணீர் இறைக்கும் பம்புகளின் உரிமையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்**

கடல் அலைகளினால் பாதிப்புக்குள்ளாகிய கரையோரப் பிரதேசங்களில் உள்ள குடிதண்ணீர் கிணறுகளை இறைத்துத் துப்புரவு செய்யவும் அப்பிரதேசங்களில் உள்ள குப்பை கூளங்களையும் இடிபாடுகளையும் அகற்றவும் அவ்வப் பிரதேசத்தின் மாநகர, நகர, பிரதேச சபைகள் நடவடிக்கை எடுக்கவுள்ளன.

இப்பணிக்கு வாடகை அடிப்படையில் தமது இயந்திரங்களின் சேவைகளை வழங்கக்கூடியவர்கள் உடனடியாக அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

து.விஜயலட்சுமி,
உள்ளூராட்சி ஆணையாளர்,
வடக்கு கிழக்கு மாகாணம். (சி-40097)(38-14-45)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 - 02 - 1940
உதிர்வு 20 - 12 - 2002

## அமரர் முத்தையா சுந்தரலிங்கம்

(திதி 27-12-2004)

அன்பின் திருவுருவே பாசத்தின் ஒளிவிளக்கே
ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும் — மாறிடுமா
உங்கள் பாசத்தின் நினைவுகள்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திகின்றோம்.

அளவெட்டி கிழக்கு, அளாகம். மனைவி, உற்றார் உறவினர்கள்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தியாகராசா சரஸ்வதி

வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா சரஸ்வதி 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காலி பிரபல வர்த்தகர் தியாகராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வாதவூர் - அன்னம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நாகரெத்தினம்மா தம்பதிகளின் மருமகளும் சரசாம்பிகை, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியர்), பாலச்சந்திரன் (தியாகராசா அன்சன்ஸ் - காலி), பாலசூரியன் (தியாகராசா அன்சன்ஸ் - காலி), லோகநாதன் (K.M.ரேடேஸ், கொழும்பு), வரிதேவன் (கனடா), திருமகள் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஈசன் (முன்னாள் உப அதிபர், சேர்.வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயம்), மங்களேஸ்வரி (லண்டன்), செல்வரதி, லலிதா, கலாமணி, சியாமளாதேவி (கனடா), ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அருணகிரி, செல்வநாயகம் மற்றும் மகாலட்சுமி, வரதலட்சுமி காலஞ்சென்றவர்களான திருச்செல்வம், தவச்செல்வம் மற்றும் அருட்செல்வம் ஆகியோரின் சகோதரியும் எழிலரசி சிவகணேசன், கேசவன், சபேசன், சாதுவன், கலையரசி, காலஞ்சென்ற தர்சன், சுபோதினி, ஜனனி, பாமதி, பாமினி, பிரசாந்த், பகீரதன், பானுரேகா, பிரியா, சுதர்சன், திவ்யா, சுகந்தன், திவாகர், தனுஷன், தர்சிகன், திலீபன், அஸ்வினி, நிஷா, கீர்த்தனா, துஷாந்த், கீர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் அபினேஸின் பூட்டியும் அன்னபூரணி, காலஞ்சென்ற பொன்னு, கந்தையா காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 30.12.2004 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைக்காகக் கனத்தை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

82, புதுச் செட்டித்தெரு,
கொட்டாஞ்சேனை.
தொ.இல.: 0112 431585 (40214)(38-14-45)

தகவல்:
தி.பாலசூரியன் (மகன்).

## கணபதிப்பிள்ளை நடராசா

தாவடியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராசா அவர்கள் நேற்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிறிறங்கநாதன், ஜெயசிறி (லண்டன்), ஜெயராணி, சிறிகரன், சிறிரஞ்சன் (லண்டன்), சிறிகாந்தன், ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,
வட்டு.தெற்கு,
வட்டுக்கோட்டை. (40219)(38-14-45)

தகவல்:
குடும்பத்தினர்.

# நல்லூர் றோட்டறக் கழகத்தின் மூலம் உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.29

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்லூர் றோட்டறக் கழகம் உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா வகைகள், உடுபுடைவைகள் ஆகியவற்றை றோட்டறக் கழகம் சேகரித்து வழங்கியுள்ளது.

இரு லொறி பொருள்களை பருத்தித்துறைப் பகுதிக்கு வழங்க அப்பகுதி அரசியல் துறையிடமும் -

ஒரு லொறி பொருள்களை முல்லைத்தீவுப் பகுதிக்கு வழங்க யாழ்.அரசியல் துறையிடமும் - கழகம் கையளித்துள்ளது. (எ-3)

# அனலைதீவிலும் கடல்பெருக்கத் தாக்கம்

தென்மராட்சி,டிசெ.29

கடல்கொந்தளிப்பின் தாக்கம் அனலை தீவிலும் ஏற்பட்டது.

அங்கு வெளிச்சக்கூடு அமைந்துள்ள கடற்கரையில் சுமார் பத்து அடி தூரம் வெள்ளம் ஊருக்குள் புகுந்துள்ளது.

அவ்வேளையில் கடற்கரையில் நின்ற சிவராசா திரிஷா (வயது 5) எனும் சிறுமியை வெள்ளம் அடித்துச் சென்றது என்றும் - எனினும் அங்கு நின்ற இளைஞர்களால் அச்சிறுமி காப்பாற்றப்பட்டார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

காலையில் திடீரென கடலில் நீர் வற்றியதால் சிறுவர்கள் அங்கு மீன்பிடித்துக் கொண்டிருந்ததாகவும் -

திடீரென வெள்ளம் அதிகரித்து கடற்கரை வந்து நிரம்புகையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த சிறுமியை இழுத்துச் சென்றதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

வெள்ளம் ஊருக்குள் புகுந்ததால் அப்பகுதியில் உள்ள ஐந்து குடும்பங்கள் இடம் பெயர்ந்து ஐயனார் கோயிலில் தங்கியிருந்து நேற்று காலை வீடு திரும்பியதாகவும் கூறப்பட்டது. (எ-117)

# வடமராட்சியில் சோககீதம்

கரவெட்டி,டிசெ.29

இயற்கை அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் வடமராட்சிப் பகுதியெங்கும் ஒலிபெருக்கிகள் மூலம் சோககீதம் இசைக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக நெல்லியடிச் சந்தி, பருத்தித்துறை கிராம கோட்டடி ஆகிய இடங்களில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதம் இசைக்கப்பட்டு வருகின்றது. (எ-70)


**ராஜா** யாழ்ப்பாணம்

அர்ஜுன் ரீமாசென் வடிவேல் தேவயானி பிரகாஷ்ராஜ் நடித்த
**கிரி**
இயக்கம் சுந்தர் C
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது கா.நேரம்: 10.30 2.30, 6.30., 9.00 (பு.நே.)
**ANACONDA -2** (ஆங்கிலப் படம்) நிதியுதவிக்காட்சி
1.1.2005 அன்று M.G.R நடித்த **உலகம் சுற்றும் வாலிபன்**
இப்பட வசூல் பணம் வடக்கு கிழக்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்படும்.
காலை: 10.30 2.30, 6.30., 9.30 (பு.நே.)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
அஜித் (இருவேடம்), பூஜா நடித்த
**அட்டகாசம்**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45 I RUBERT

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக அர்ஜுன் (இருவேடம்) சாயாசிங் லைலா வடிவேல் நடித்த
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00(பு.நே.)

**ஜெய் சூர்யா**
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் கார்டின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம்.


## A.V.M இன் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு: T.V.S விக்டர் மோட்டார் சைக்கிள் இல. 4888
இரண்டாம் பரிசு: V.C.D Player 5336
உரியவர்கள் மருதனார்மட பிரதேச செயலருடன் தொடர்புகொண்டு பரிசுகளைப் பெற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
உடுவில். (40176)

J.சிறீதரன்.
T.P.:077 6152175

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் குமாரசாமி பிரதீபன்



மல்லாகம், காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கேசாவில் வீதி, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி பிரதீபன் 26.12.2004 அன்று கீரிமலையில் அகாலமரணமானார்.

அன்னார் குமாரசாமி (பொன்னர்) - விக்னேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் விஜிதா, கிரிஜா, அஜந்தா, வசந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாலா, இளங்கோ, கவிதாஸ் ஆகியோரின் மைத்துனரும் அஸ்வியன், அரோசன், இனுஜா, தனுஜா, யனோசிகன், நிவ்ஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2004) புதன்கிழமை பகல்11 மணிஎவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/18, கேசாவில் வீதி,
வண்ணார்பண்ணை.
T.P 0777030888 (40217)(29-43-14)

தகவல்:
நா.குமாரசாமி
(பொன்னர் - தகப்பன்).

## சண்முகம் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்

(களுமாத்தயா J.P., காலி பெட்டா ஏஜென்சி, மாணிக்கம்ஸ், பெட்டா ஜுவல்லறி, மார்ட், பெட்டா குறூப் அதிபர்)

காரைநகர் பலுகாடைப் பிறப்பிடமாகவும் காலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத் தம்பி சிவசுப்பிரமணியம் (களுமாத்தையா) 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரண மடைந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - பாறுவதியின் அன்பு மகனும் நித்தியலெட்சுமியின் அன்புக் கணவரும் புளியங்கூடல் தில்லையம்பலம் - பரமேஸ்வரியின் அன்பு மருமகனும் அன்னபாக்கியலட்சுமி, சரஸ்வதி, முருகானந்தம் (லவன் பிறதேர்ஸ்-காலி), சிவானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொட்டு மணியம்), மோகனதாஸ், தர்மதேவி விஜயலட்சுமி, வைத்தியநாதன் (ஒஸ்ரியா), பாஸ்கரன் (சசி) ஆகியோரின் அருமை மைத்துனரும் லவராசா (கொழும்பு இந்துக் கல்லூரி), சிறிநந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி), நர்மதா (வேம்படி மகளிர் கல்லூரி), நந்தனன் (யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் புஸ்பராணி, தவராஜசிங்கம், குமரகுருபரன் (ரஞ்சன் - லண்டன்), ஜெயராசா (லண்டன்), புஸ்பமலர் (நீர்கொழும்பு), தவரூபன் (நீர்கொழும்பு), கமலதாஸ், கண்ணதாஸ், விமலதாஸ் (கொழும்பு), ரஜனி (யாழ்.பல்கலைக்கழகம்), விஜிதா (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் புளியங்கூடல் சுந்தரலிங்கத்தின் சகலனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

128, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (40093)(43-14-29)

தகவல்:
முருகானந்தம்
(ஆனந்தன்- தம்பி).

## திருமதி சண்முகநாதன் இந்திரா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் இந்திரா 27.12.2004 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் சண்முகநாதனின் அன்பு மனைவியும் ஜேசன், கயேன், விதுரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற அப்பையா மற்றும் இரத்தினத்தின் (உரும்பிராய்) மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் பருவதம் (அரியாலை) அவர்களின் மருமகளும் சத்தியபிரபா, சந்திரபிரபா, கருணாவதி, கலாவதி, பிரபாகரன், வசீகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.12.2004) வியாழக்கிழமை கனடாவில் 12.00மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சதா பேக்கரி வீதி,
உரும்பிராய் மேற்கு. (40209)(12-43-14-29)

தகவல்:
சத்தியபிரபா (ரஞ்சன்),
சகோதரன்

## சி.பொ.ஐயாத்துரை (J.P)



ஈவினையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சமூகசேவையாளர் சி.பொ.ஐயாத்துரை (J.P) அவர்கள் நேற்று (28.12.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரன், இரத்தினேஸ்வரன், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவராசகுலம், சத்தியவாணி, கிருஷ்ணதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியதர்ஷினி, நகிலசங்கரி, அபிலன், வனஜா, ஜெயந்தன், தனுசியா, அபர்ணா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.12.2004) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை விலங்கன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஈவினைமத்தி,
சுன்னாகம். (40215)(38-14-45)

தகவல்:
பொ.கிருஷ்ணதாசன்
(மருமகன்).

## மூன்று வயதுக் குழந்தையுடன்
# கணவனும் - மனைவியும் கிணற்றில் குதித்தனர்
## இருவருக்கும் காயம், குழந்தை மரணம்

யாழ்ப்பாணம், டிசெ.29

நீர்வேலிப் பகுதியில் நேற்றிரவு மூன்று வயதுக் குழந்தையுடன் தாயும் தந்தையும் கிணற்றில் குதித்தபோது மூன்று வயதுக்குழந்தை நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தது.

தந்தையும் தாயும் அயலவர்களால் உயிருடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீர்வேலி பெய்த்தி வீதியைச் சேர்ந்த எஸ்.விஜயகுமார் (வயது - 34), அவரது மனைவியான எஸ்.லிங்கேஸ்வரி (வயது -21) ஆகியோரே யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மூன்றுவயதுடைய சர்மினியின் சடலம் யாழ்.ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நேற்றிரவு இடம்பெற்ற குடும்பச் சச்சரவு காரணமாகத் தாயும் குழந்தையும் வீட்டிலுள்ள கிணற்றில் குதித்தனர் என்றும் -

இதனையடுத்து கணவரும் சேர்ந்து குதித்தார் என்றும் - கூறப்பட்டது. அயலவர்களால் மீட்கப்பட்ட கணவனும் மனைவியும் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றிரவு சேர்க்கப்பட்டனர். (3-7)

# புதிய ஆண்டில் பாடசாலைகள் ஆரம்பமாவது தாமதமாகும்

கொழும்பு,டிசெ.29

டிசெம்பர் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள அரச பாடசாலைகள், மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் மூடப்பட்டே இருக்கும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இப்பாடசாலைகள் 3 ஆம் திகதி திறக்கப்படவிருந்தன.

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள பேரனர்த்த நிலையைக் கருத்திற்கொண்டே இந்த முடிவை கல்வி அமைச்சு எடுத்தது.

அரச பாடசாலைகள் மீளவும் திறக்கும் திகதி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, கொழும்பு பல்கலைக்கழகத்தில் 3,5,6 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமென உபவேந்தர் அறிவித்துள்ளார்.

(க-3-7)

## மலையகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கவேண்டும் எனவும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்டுள்ளார். திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் மூன்று லொறிகளில் நிவாரணப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டபோது அவற்றைப் படையினர் அபகரித்ததைத் தொடர்ந்தே இந்த உத்தரவாதத்தை அவர் பாதுகாப்பு அமைச்சிடம் கோரியுள்ளார். வடக்குக்கு எடுத்துச்செல்லப்படும் நிவாரணப் பொருள்களைச் சோதனை என்ற பெயரில் இராணுவச் சோதனைச் சாவடியில் ஏற்றியிறக்க முற்பட்டால் அதை அனுமதிக்கமுடியாது என பெ.சந்திரசேகரன் எம்.பி. உதயனுக்குத் தெரிவித்தார்.

## அனர்த்தத்தைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அபிவிருத்திக்கான திட்டமிடல் செயலகத்தில் இந்தக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு தமிழ்ச்செல்வன் சர்வதேசச் சமூகத்திடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து வன்னி வரும் சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகள் சேதங்கள் மற்றும் உதவிகள் குறித்து தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடுவர். (எ-3)

## நிவாரண பணிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை ஐ.தே.கட்சி எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கில் யாழ். மாவட்டத்துக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக மகேஸ்வரன் எம்.பியையும் -

வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியாப் பகுதிகளுக்கு நிவாரப் பொருள்களை அனுப்பும் நடவடிக்கைக்கு ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.யையும் பொறுப்பாக ரணில் விக்கிரமசிங்க நியமித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. நிவாரண உதவிப் பொருள்களுடன் தாம் விரைவில் கிளிநொச்சிக்குச் செல்லவிருக்கின்றார் என்று ஜயலத் ஜயவர்த்தன எம்.பி.தெரிவித்தார். (க-3)

## இயற்கை அனர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் ஆலோசகரும் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சுச் செயலாளர் ஜயசிங்க ஆகியோரே இந்த அரசுக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

இன்று காலை 9 மணிக்கு யாழ்.வரும் அரசகுழுவினர், பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கும் செல்வர்.

நிவாரணப் பணிகள் குறித்து அரச அதிகாரிகளுடன் அவர்கள் ஆராய்வர். (எ-3)

## சாவு: 20,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது உறவுகள், உடைமைகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். அவர்கள் ஆலயங்களிலும் பொது இடங்களிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 15 ஆயிரம் பேர் வரையிலானோர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் உள்ள வைத்தியசாலைகள் காயமடைந்தவர்களால் நிரம்பி வழிகின்றன.

நேற்றுவரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி அம்பாறையில் 5,350 பேரும் யாழ்ப்பாணத்தில் 1,171 பேரும், திருகோணமலையில் 844 பேரும், மட்டக்களப்பில் 1,504 பேரும், முல்லைத்தீவில் 1,003 பேரும், காலியில் 3,639 பேரும், மாத்தறையில் 1,960 பேரும், அம்பாந்தோட்டையில் 2,500 பேரும், ஏனைய இடங்களில் 200 பேர்வரையிலானோரும் உயிரிழந்துள்ளனர். இவர்கள் தவிர முல்லைத்தீவுப் பகுதியில் 2,750 பேர்வரையிலானோரையும் மட்டக்களப்பு - அம்பாறையில் 6 ஆயிரம் பேர் வரையிலா னோரையும், ஏனைய இடங்களில் மேலும் சில நூற்றுக்கணக்கானவர்களையும் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

## இரண்டாயிரம் பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சுச் செயலருக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளார்.

குடாநாட்டில் உயிரிழந்தவர்களில் 640 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றபோதும் மிதிவெடிகள் காரணமாகப் பணிகள் தாமதமாகவே இடம்பெறுகின்றன.

காணாமற்போன மற்றும் இறந்தவர்களின் விவரங்கள் குறித்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2 ஆயிரம் பேர் காணாமற்போனார்கள் என அக்கணக்கெடுப்பு தெரிவிக்கின்றது என்று அதில் உள்ளது.

இதேவேளை -

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான முதல்கட்ட நிவாரணப் பணிகளுக்கென அரசினால் ஒருகோடி ரூபா யாழ்.செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

(எ-3)

## உதவிப் பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிப்பதாவது:-

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் பல்வேறு வகையான உதவிகளை வழங்கும் பொருட்டு பலர் நிதிசேகரிப்பு, உலர் உணவுப் பொருள்கள் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் உதவிப் பொருள் சேகரிப்பு விநியோகத்தில் துஷ்பிரயோகம் ஏற்படாதவகையிலும் -

மற்றும் உதவிப் பொருள்கள் விநியோகத்தில் இரட்டிப்புத் தன்மை இடம்பெறாது தடுக்கும் நோக்குடனும் சிலருக்கு உதவிப்பொருள்கள் கிடைக்காமல் போவதைத் தடுக்கும் பொருட்டும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இத்தகைய நிலைமையினைத் தவிர்க்கும் பொருட்டு முதலில் உதவிப்பொருள்கள் மதிப்பிடப்படல் வேண்டும். பின்னர் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடங்களில் பாதிக்கப்பட்டவர்களின் தரவுகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இவற்றின் பின்னர் உதவிப்பொருள்களை விநியோகிக்கின் அது அனைவரையும் சென்றடையும்.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு உதவும் சேவையினைத் தொடருமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

(எ-13)

## அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கே யாழ்ப்பாணம் முதல் தெற்கே காலி வரை கடற்கொந்தளிப்பினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் ஆயிரக்கணக்கில் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. நேற்றும் ஆயிரக்கணக்கான சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஆயிரக்கணக்கானவர்களைக் காணவில்லை. அவர்களும் இறந்திருக்கக் கூடும் என்று அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

நிர்க்கதியாகி நிற்கும் 10 லட்சத்திகும் மேற்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளன. நிவாரணப் பணிகளும் பெருமளவில் மேற்கொள்ளப்படவேண்டிய தேவையுள்ளது.

சில சர்வதேச மற்றும் உள்ளூர் தொண்டர் நிறுவனங்களும் பொது நிறுவனங்களும் கடந்த மூன்று நாள்களாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றன. எனினும், அவை போதியளவில் இல்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அரச உதவிகள் நேற்றுவரை கிடைக்கவில்லை. அவை இன்றுவரும் நாளை வரும் என்று அரச அதிகாரிகள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குமாறு அரசு, உதவி வழங்கும் நாடுகளுக்கு அவசர கோரிக்கைகளை விடுத்திருந்தது. இதனையடுத்துப் பெருமளவில் உதவிகள் வந்து சேர்கின்றன என்று கொழும்பில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால், இவை பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ வசதிகள் இன்றிப் பாதிக்கப்பட்ட மக்களில் சிலர் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச உதவிகள் மருந்துக்குக் கூடச் சென்றுசேரவில்லை என்று கூறப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு என அரசால் ஒதுக்கப்பட்ட ஒரு கோடி ரூபா நிதி பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினருக்கு உதவிகளை வழங்குவதற்குக் கூடப் போதாது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

மீட்புப் பணிகளை வேகமாக மேற்கொள்வதற்கு ஆளணிப்பற்றாக்குறை காணப்படுகின்றது. கடல் அலை அடித்துச்சென்ற கிராமங்கள், நகரங்கள் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன. உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. அவற்றைத் தேடி அப்புறப்படுத்துவதற்கு இடையில் நீரில் ஊறி அவை பழுதடைகின்றன. இதனால் எழும் துர்நாற்றம் பாதிக்கப்பட்ட பிரதேசம் எங்கும் வீசுகின்றது என்று அங்கிருக்கும் எமது செய்திளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால், அப்பிரதேசங்களில் சுகாதாரப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. போதிய வசதிகள் இல்லாத நிலையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பதால், தொற்றுநோய்கள் பரவும் அபாயமும் காணப்படுகின்றது. அத்துடன், குடிதண்ணீர்ப் பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்கையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் அரசு மிகவும் மெத்தனப் போக்குடன் செயற்படுகின்றது என்று மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அரசின் அவசர மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவில்லை என்றால், தற்போதைய மனிதப் பேரவலம் மேலும் அதிகரிக்கும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-3)

## நிவாரணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறிக்கொண்ட - சிலரும் அபகரித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் கண்டி மற்றும் நுவரெலியாப் பகுதிகளில் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் தலைமையில் சேகரிக்கப்பட்ட நிவாரணப்பொருள்களை ஏற்றிக்கொண்டு மூன்று லொறிகள் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டன.

இந்த மூன்று லொறிகளும் ஹபரணைச் சந்தியை அடைந்ததும் அதனை வழிமறித்த இராணுவத்தினரும் மற்றும் தம்மை அரச அதிகாரிகள் என்று கூறிக்கொண்ட சிலரும் அதிலுள்ள பொருள்களை அந்த இடத்திலேயே தம்மிடம் கையளிக்குமாறு கோரியுள்ளனர். தாம் உரிய இடங்களுக்கு அவற்றை எடுத்துச் சென்று விநியோகிப்போம் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

திருகோணமலையில் அகதிகளாகவிருக்கும் மக்களுக்கே இந்தப் பொருள்களை நேரடியாக விநியோகிக்குமாறு எமது கட்சித் தலைவர் எம்மிடம் கூறி அனுப்பிவைத்தார் என்று நிவாரணப் பொருள்களுடன் சென்றவர்கள் கூறிய போதும் அவர்கள் அதற்கு இடம்கொடுக்கவில்லை. இரண்டு லொறிகளில் உள்ள பொருள்களை அவர்கள் பலாத்காரமாக இறக்கியுள்ளனர்.

மூன்றாவது லொறியின் சாரதி பொருள்கள் எதனையும் அங்கு இறக்க அனுமதிக்காமல் நேற்று மீண்டும் அப்பொருள்களுடன் கண்டிக்குத் திரும்பி வந்துவிட்டார்.

இந்த மோசமான செயலில் இராணுவத்தினரும் அரச அதிகாரிகள் எனக் கூறிக்கொள்பவர்களும் ஈடுபட்டமை குறித்துச் சந்திரசேகரன் எம்.பி. பாதுகாப்பு அமைச்சுக்கும் ஜனாதிபதிக்கும் முறையிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கு மக்கள் தாமாகவிரும்பிக் கொடுக்கும் நிவாரணப்பொருள்களை பலாத்காரமாகப் பறிக்கமுயல்வது மிகவும் கீழ்த்தரமான செயல் எனவும் -

இது இனரீதியாக மேற்கொள்ளப்படும் செயலா என்று தாம் சந்தேகம் கொள்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

பெருந்தோட்டத்துறை அமைச்சுத் தொழிலாளர்களிடமோ அன்றி தொழிற்சங்கப் பிரதிநிதிகளிடமோ எவ்வித ஆலோசனையும் செய்யாமல் தன்னிச்சையாக - நேரடியாக - தோட்டக்கம்பனிகளுக்கு உத்தரவொன்றைப் பிறப்பித்து தொழிலாளர்களிடமிருந்து அவர்களின் இரண்டுநாள் அல்லது ஒருநாள் சம்பளத்தை அறவிடும்படியும் நிவாரண விநியோகத்துக்காக அப்பணத்தை பெருந்தோட்ட அமைச்சுக்கு அனுப்புமாறும் கோரியுள்ளது எனக் கூறப்படுகின்றது.

தொழிலாளர்களின் அனுமதியின்றி - தன்னிச்சையாக - யாரும் அவர்களின் சம்பளத்தைப் பறிக்க அனுமதிக்கமுடியாது. பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யவேண்டியது இலங்கைப் பிரஜைகளின் கடமை. தோட்டத் தொழிலாளர்கள் தமது பணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படியான உதவிகளைச் செய்யவேண்டும், அதை யாருக்கு வழங்கவேண்டும் என்பது பற்றி தாங்களாகவே முடிவெடுக்கவேண்டும். அதை யாரும் வலிந்து அவர்கள்மீது திணித்து அறவிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. பெருந்தோட்டத்துறைக்குப் பொறுப்பான அமைச்சுத் தொழிலாளர்களின் அனுமதியின்றி அவர்களின் சம்பளத்தை அறவிட முயற்சிப்பது தொழிலாளர்களின் பணத்தை அபகரிக்கும் ஒரு செயலாகவே அமையும் - என பெ.சந்திரசேகரன் தெரிவித்தார். (க-3)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# SEA-ME - WE 4 என்ற இணையத்தளம் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தால் அறிமுகம்

Sri Lanka Telecom நிறுவனம் SEA- ME-WE 4 என்ற இணையத்தளத்தை இம்மாதம் . 15 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. இந்த இணையத்தளம் தென்கிழக்காசியா, மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பா- 4 ஆகிய நாடுகளை ஒன்றிணைக்கின்றது.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தென்கிழக்காசிய, மத்திய கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய - 4 நாடுகளின் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்கு இந்த இணையத்தளம் பிரதானமாகக் காட்சிப்படுத்தப்பட்டது.

இந்த இணையத்தளம் மிகவும் வித்தியாசமான ஒன்றாகும். இதன் உள்ளக மற்றும் வெளியக முன்னேற்றத்தைப் பின்பற்ற அங்கத்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகளால் பயன்படுத்தப்படுகின்ற அநேக முறைமைகளை பாவனையாளர்கள் காணக்கூடிய வழிமுறைகள் இதில் உண்டு.

இது SEA- ME- WE 4 Projectஇன் பிரதிநிதிகளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சிறப்புத் தன்மைகளை மையமாகக் கொண்ட நேர்த்தியான Mail Server ஐயும் வழங்குகின்றது.

Micronet View Building Monitoring System இனால் கட்டுப்படுத்தப்படுகின்ற Secure Disaster Recovery Centre இல் உள்ள மேலதிக சிறப்பம்சங்களை இவ் இணையத்தளம் கொண்டுள்ளது.

கூட்டம் இடம்பெறும் திகதிகள், நேரங்கள், இடங்கள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் போன்ற சுவாரசியமான பகுதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேபோல் ஒவ்வொரு கூட்டங்களினதும் கூட்டறிக்கைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

SEA- ME- WE 4 Submarine Cable System நிர்மாணிப்பைப் பூர்த்திசெய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகளை இந்த SEA- ME- WE 4 இணையத்தளம் வழங்கும்.

SEA- ME- WE 4 Submarine Cable System என்ற கடலுக்கடியிலான தொலைத் தொடர்பு சேவையை நிர்மாணித்து அதனைப் பராமரிப்புச் செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் இவ்வருடம் மார்ச்மாதம் 27ஆம்திகதி 16 சர்வதேச தொலைத் தொடர்பு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கைச்சாத்திட்டனர்.

சிங்கப்பூர், பாகிஸ்தான், ஐக்கியஅரபு ராஜ்ஜியம், சவூதி அரேபியா, எகிப்து, இத்தாலி, துனிஸியா, அல்ஜீரியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள தொலைத்தொடர்பு நிலையங்களுடன் இணைந்து இந்திய உபகண்டம் மற்றும் மத்திய கிழக்கின் ஊடாக தென்கிழக்கு ஆசியாவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்த இந்த SEA- ME- WE 4 Submarine Cable System பயன்படுத்தப்படும். இதன் நிர்மாண ஒப்பந்தம் Alcatel Submarine Networks, France and fujitsu Ltd மற்றும் Japan ஆகிய நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த கேபிளின் நீளம் 20 ஆயிரம் கிலோ மீற்றராகும். இது பல நாடுகளின் விரிவான தொடர்பைக் கொண்டிருக்கும். மிகவும் சிக்கனமான அமைப்பைக் கொண்ட இந்த கேபிள் முறைமை DWDM தொழில் நுட்பத்துடன் நிறுவப்படும். இத்தொழில் நுட்பம் அதிகவேகமாகத் தொடர்பை ஏற்படுத்தும். இந்த கேபிள் முறைமை தொலைபேசி, இணையத்தளம் மற்றும் மல்டி மீடியா போன்றவற்றிற்குப் பொருத்தமாக அமையும்.

இதன் முகாமைத்துவக் கட்டமைப்பில் Srilanka Telecom நிறுவனமே முதன்மைப் பங்கு வகிக்கின்றது. நிதி மற்றும் நிர்வாகக் குழுவுக்கும் இந்நிறுவனமே தலைமை வகிக்கின்றது. இத்திட்டத்திற்கான முழுச் செலவு 5 ஆயிரம் கோடி ரூபாவாகும். Telecom நிறுவனம் 300 கோடி ரூபாவை முதலீடு செய்துள்ளது.

Telecom நிறுவனம் இலங்கையில் முதன்மையான தொலைத்தொடர்பு சேவை நிறுவனமாகும். இதில் 8 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் நாடு பூராகவும் கடமை புரிகின்றனர். இந்த ஊழியர்களின் ஒத்துழைப்புடன் 2 லட்சத்து 50 ஆயிரம் முதல் 8 லட்சத்து 50 ஆயிரம் வரையிலான தொலைபேசி இணைப்புகளை வழங்கி அதனைப் பராமரித்து வருகின்றது. Telecom இன் வருடாந்த வருமானம் இரண்டாயிரத்து இருநூறு கோடி ரூபாவாகும். இப்பொழுது இந்நிறுவனம் NTT ஜப்பான் நிறுவனத்துடன் இணைந்து தனது வாடிக்கையாளர்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கிவருகின்றது.





Sri Lanka Telecom

விளையாட்டுப் பொருட்கள்

ஆடைகள்

சொக்கலேற்றுகள்

ஆபரணங்கள்

டிறைக்கிளீனர்ஸ்

பண்டிகையைக் குதூகலமாக கொண்டாட உங்களுக்கு தேவையான சகலதையும் இலகுவாகவும், விரைவாகவும் வாங்க வர்ணமயமான நாடுதழுவிய தொலைபேசி விபரக் கொத்து - "SLT ரெயின்போ பேஜஸ்" ஐப் பாருங்கள். மேலதிக விபரங்களைப் பெற கட்டணமற்ற எமது சிறப்புத் தொலைபேசி (011) 2399399 மூலம் அழைக்கவும்.

SLT RAINBOW PAGES

விபரமானது, வசதியானது, வர்ணமயமானது.

# செல்போன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காய்கறி விவசாயம்




நாகரிகம் கொடிகட்டிப்பறக்கும் காலம் இது. புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் 'திருவாளர்' பொதுமகன் சொகுசு வாழ்க்கையில் மூழ்கித்திளைக்கிறார். பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் வாழ்வில் மின்னியல் பொருட்கள் இரண்டறக் கலந்துவிட்டன.

மிக்சி கிரைண்டர், டி.வி.,செல்போன், ஏ.சி., கணினி, கார் - பைக் .... இவையெல்லாம் இல்லாவிட்டால் மனித வாழ்க்கையே ஸ்தம்பித்து விடும் என்ற அபாயம் உள்ளது.

மனிதன் இயற்கையை வெல்ல எடுக்கும் முயற்சிகள் ஒருபுறம் தீவிரமாக நடந்துகொண்டிருக்கும்போது சர்வசக்தி வாய்ந்த இயற்கை, மனிதனை பல வகையில் சோதனை செய்கிறது. ஆனால், இந்த சோதனைகளையே மனிதன் தனது ஆராய்ச்சி அறிவு மூலம் சாதனைகளாக மாற்றி வருகிறான். அத்தகைய சாதனைகளில் ஒன்றுதான் உள் அரங்கில் காய்கறி மற்றும் உணவுப் பயிர்களை பயிர்செய்தல். அதுவும் செல்போன் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் சிகப்பு ஒளிக்கதிர்களைக்கொண்டு காய்கறிகளை பயிரிடும் புதிய தொழில்நுட்பம்.

ஜப்பான் நாட்டில் அடிக்கடி பூகம்பம் மற்றும் புயல் - மழை போன்ற இயற்கை சீரழிவுகள் நிகழ் கின்றன. இதன் காரணமாக மக்களுக்குத் தேவையான காய்கறிகள் மற்றும் உணவுப் பயிர்களைப் பயிரிடமுடியாதநிலை இருந்துவந்தது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உள் அரங்கில் பயிரிடும் வகையில் புதிய விவசாய முறைகளை உருவாக்க முடிவு செய்தனர். பயிர்கள் நன்கு வளர சூரிய ஒளி மிக அவசியம். வயல் வெளி திறந்த நிலையில் இருப்பதால் பயிர்களுக்கு சூரிய ஒளி எளிதாகக் கிடைக்கும். மூடப்பட்ட அரங்கில் சூரிய ஒளியை எப்படிக் கொண்டுவருவது என்று விஞ்ஞானிகள் சிந்தித்தனர். அப்போது செல்போன்களில் பயன்படுத்தப்படும் அகச் சிவப்பு கதிர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயிர்களுக்கு தேவையான சூரிய ஒளிச் சக்தியை கொடுக்கலாம் என்பதை கண்டுபிடித்தனர்.

இதைத் தொடர்ந்து ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹிகாரி என்ற இடத்தில் உள் அரங்க வயல் அமைக்கப்பட்டது. இந்த உள் அரங்க வயலின் கூரையில் சிவப்பு ஒளியை உமிழக்கூடிய விளக்குகள் (Light Emiting Diodes - LEDs) பொருத்தப்பட்டன. இந்த விளக்குகளில் இருந்து 660 நனோ மீற்றர் அலை நீளம் கொண்ட ஒளிக்கதிர்கள் வெளிப்பட்டு பயிர்கள் மீது பாய்ந்தன.

இது தவிர வழக்கமான உரங்கள் மற்றும் தேவையான தண்ணீர் போன்றவையும் பயன்படுத்தப்பட்டன. முதல் கட்டமாக ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் காய்கறிகள் மற்றும் கீரைவகைகள் பயிரிடப்பட்டன. பொதுவாக வயல் வெளியில் இவை பயிரிடப்பட்டால் பயன்கிடைக்க 3 மாதங்கள் ஆகும்.

மேலும், 120 நபர்கள் விவசாயப் பணிகளை கவனிக்க வேண்டியிருக்கும். ஆனால், உள் அரங்க வயலில் காய்கறிகளைப் பயிரிட்டபோது அவை வயலில் விளைவதை விட மிக குறைந்த காலத்தில் விளைந்தன. விளைச்சலும் அமோகமாக இருந்தது. வேலைக்குத் தேவையான கூலி ஆட்களின் எண்ணிக்கையும் 10 முதல் 25 நபர்களுக்குள்தான் இருந்தது. மேலும், இந்த முறையில் பயிர் செய்தபோது பயிர்களுக்கு நோய் தாக்குதல் எந்தக் கட்டத்திலும் ஏற்படவே இல்லை.

இந்த நவீன பயிரிடும் முறைக்குஆகும் மின்சார செலவும் வழக்கைத்தைவிட குறைவாகவே இருந்தது. வழக்கமான முறையில் தண்ணீர் பாய்ச்சுதல் மற்றும் பிற விவசாய வேலைகளுக்கு ஆகும் செலவை விட 60 சதவீதம் குறைவான மின்சார செலவே சிவப்பு விளக்குகளை இயக்க பிடிக்கிறது.

உள் அரங்க வயல்வெளிகளை அதிகமாக அமைப்பதன் மூலம் எந்த காலநிலையிலும், எந்த பருவ நிலையிலும் நாம் விவசாயம் செய்ய முடியும். அதாவது, பனிநிறைந்த பகுதியில்கூட நாம் உள் அரங்க வயல்கள் மூலம் எப்போது வேண்டுமானாலும் பயிர் செய்யலாம். மேலும், அதிக வெய்யில், பனி, மழை, குளிர், புயல் போன்ற எந்த இயற்கை சீற்றங்கள் வந்தாலும் பாதிப்பு இன்றி விவசாயம் செய்ய முடியும்.

மேலும், வழக்கமான முறையில் ஆகும் காலத்தை விட மிக குறைந்த காலத்தில் பயிர்கள் விளைந்து விடுவதால், குறுகிய காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்ய முடியும். அதாவது, 3 போகம் விளையக்கூடிய இடத்தில் 6 போகம் விளையச் செய்ய முடியும். இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பனிப் பிரதேசத்திலும், பாலைவனத்திலும்கூட விவசாயம் செய்யமுடியும்.

தற்போது ஜப்பான் நாட்டில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கணிசமான அளவு காய்கறிகள் மற்றும் கீரை வகைகளை உற்பத்தி செய்யும் முயற்சிகள் நடந்துவருகின்றன. இந்தத் தொழில்நுட்பத்தை மற்ற நாடுகளும் தங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

